

# தமிழரசு


1.9.1995 ரூ.3



## நிகழ்ச்சிகளில் சில....

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !



மாஸ்டர் ஸ்ரீதர் நாடகக் குழுவினரின்
"வெற்றிக்கனி" - நாடகம்




மாணவர் அரங்கம்:
செல்வன் கே. கமலக்கண்ணன்
செல்வி சுல்தானா தில்ரஷ்
செல்வி ப. காயத்திரி

# இந்த இதழில்...


புதிய அமைச்சர்கள் பதவியேற்பு ............. 2

மாவட்ட ஆட்சித்
தலைவர்கள் மாநாட்டில்
மாண்புமிகு முதல்வர் உரை..................... 3

படமும் செய்தியும்....................................... 10

குமரித்தந்தை மார்ஷல் நேசமணி
நூற்றாண்டு விழா......................................... 13

தமிழ்கூறும் நல்லுலகம்
—மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. சேடபட்டி இரா. முத்தையா ...............17

இராமநாதபுரம் மாவட்டத்தில்
காயிதெமில்லத் முகமது இஸ்மாயில்
சாகிப் நூற்றாண்டு விழா ......................... 20

சிதம்பரனார் மாவட்டத்தில்
"டோக்ரா" திட்டம்......................................... 22

விருதுநகரில் பெருந்தலைவர் காமராசர்
பிறந்த நாள் விழா ....................................... 24

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
—கவிஞர் கலி. பூங்குன்றன் .......................26

இராஜா ரவிவர்மா தீட்டிய
சர்.டி. முத்துசாமி ஐயரின்
ஓவியம் பாதுகாப்பு ...................................... 30

21-ஆம் நூற்றாண்டும் கலைகளும்
—திரு. கணபதி ஸ்தபதி ............................. 34

மாணவர் பக்கம் ........................................... 40

நூல்நயம்....................................................... 41

பேசும் பொம்மைகள்..................................... 43




**இதழ்தோறும் ஓர் இனிய குறள்**

*செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்*

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026
ஆவணித் திங்கள் : 16

மலர்: 26 இதழ்: 5

1.9.1995

விலை ரூபாய்: 3

# புதிய அமைச்சர்கள் பதவியேற்பு



1.9.95 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் முன்னிலையில், நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு சி. தாமோதரன் அவர்கள் கால்நடைத்துறை அமைச்சராகவும், கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராகவும் பதவி யேற்றனர்.

புதிய அமைச்சர்களுக்கு மேதகு ஆளுநர் திரு எம். சென்னாரெட்டி அவர்கள் பதவிப் பிரமாணமும் ரகசியக்காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.





# 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தொடர்ந்து அமல்படுத்துவோம்

## மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை


தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாடு சென்னை கோட்டை யில் **23.8.95** அன்று தொடங்கியது. மாநாட்டை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கிவைத்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது :

இந்த அரசு மக்களுடைய உரிமை களுக்காகவும், நலனுக்காகவும் செயல் படுகிறது. எப்போதுமே சாதனைகளுக்குத் தான் முக்கியத்துவம் அளித்து வருகிறது.

எனவே, நாங்கள் என்ன செய்தோம் என்பதை மட்டும் பேசும் கூட்டமாக மட்டும் இல்லாமல், வரும் மாதங்களில் நாம் என்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தந்த மாதங்களைச் சாதனை மாதங்களாக மாற்றும் மாநாடாக இது திகழ வேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பமாகும்.

### முதல் இடம்

தமிழ்நாட்டின் திட்ட ஒதுக்கீடு **2750** கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டதற்கு மாறாக **2,775** கோடி ரூபாய் பயன்படுத்தி சாதனை படைத்துள்ளோம் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நல்ல முறையில் வெற்றிகரமாக நிறைவேற்றியதில் தமிழ்நாடு முன்னணியில்



இருக்கிறது. இந்த ஆண்டும் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றியதில் நாட்டில் தமிழ்நாடு தான் முதல் இடத்தில் இருக்கிறது. இதற்காக நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பாராட்டுகிறேன்.

திட்டக் குறியீடுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சாதனை படைத்துள்ளதில் நான் மகிழ்ச்சி அடைந்தாலும், வளர்ச்சி என்பது வெறும் எண்ணிக்கை விளையாட்டு அல்ல என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஏழ்மைக்கு எதிராக உள்ள போராட்டம் தான் மிகவும் கடுமையான பணியாகும்.

**வாழ்க்கைத்தரம்**

நீர், உணவு, குடியிருக்கும் இடம், ஆரோக்கியம், கல்வி போன்ற அடிப்படை மனிதத் தேவைகளை நிறைவேற்றுவதில் ஒரு நிரந்தரத் திருப்தியோடு நமது பணிகளை நிறைவேற்ற வேண்டும். நமது கிராமங்களில் உள்ள வாழ்க்கைத் தரம் இந்த அடிப்படை வசதிகளைத் தான் சார்ந்து இருக்கிறது.

குடும்ப நலத் திட்டத்தை 15 அம்சத் திட்டத்தின் கீழ் கொண்டுவர நான் அறிவித்த அறிவிப்பு, கடந்த ஆண்டு குடும்பநலத் திட்டக் குறியீடுகளை எய்த வழி வகுத்துள்ளது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வரும் மாதங்களிலும் இதில் நமது முயற்சிகளை ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்.

**2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி!**

பொது விநியோக முறையில் சாதாரண ரக அரிசி விலையை, கிலோ 2 ரூபாய் என்ற அளவில் வைக்கும் முயற்சியில் ஈடுபடும் சில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று. இதனால் மட்டும் ஆண்டுக்கு 515 கோடி ரூபாய் மானியம் வழங்க வேண்டியது இருக்கிறது.

ஏழைகளுக்கு, அவர்களால் வாங்கக் கூடிய விலையில், உணவுப் பொருட்களை வழங்கும் சமுதாயக் கட்டாயங்களை நிறைவேற்றும்போது அதற்கான மானியத் தொகையை வழங்கும் எந்தவித இழப்பீட்டு நடவடிக்கைகளிலும் மத்திய அரசாங்கம் துணையாக இல்லை. ஆனால், விலைவாசிகளைக் குறைப்பதற்காக விவசாயிகளுக்கு மத்திய அரசாங்கம் ஊக்கத் தொகை நிர்ணயிக்கும்போது மாநில அரசும் ஊக்கத் தொகை வழங்குகிறது.

**தொடர்ந்து அமல் நடத்துவோம்!**

மத்திய அரசின் மானியத் தொகை எதையும் பொருட்படுத்த மாட்டோம். மத்திய அரசு உதவி கிடைக்காவிட்டாலும் தமிழ்நாட்டில் உள்ள ஏழைகளுக்கு 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும்



திட்டத்தை அரசு தொடர்ந்து அமல் நடத்தும் என்பது தான் இந்த அரசின் நிலையான உறுதி என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

ஏழைகளுக்கு அரிசி மற்றும் அத்தியா வசியப் பண்டங்கள் வழங்குவதில் தமிழக அரசு பெரு முயற்சி எடுத்துச் சாதனை படைத்துள்ளது. இந்தப் பயன்கள் எந்தவிதத் தாமதமும் இல்லாமல் ஏழைகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

**கண்காணிப்பு**

சரியான தரத்தில், சரியான எடையில், அளவில் உணவு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் ஏழைகளுக்குப் போய் கிடைக்கும் வகையில் பொதுவிநியோக முறை செயல்பாட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.

**வேலைவாய்ப்பு**

ஏழைகள் குறிப்பாகப் பெண்கள் அத்தியாவசியப் பண்டங்களை வாங்க நீண்ட தூரம் நடந்து செல்லும் கஷ்டத்தைப் போக்கும் வகையில், ஒவ்வொரு குக் கிராமத்திலும் கிளை விற்பனைக் கடை களைத் திறக்க வேண்டும் என்று இப்போது நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தக் கடை ஒரு பெண் அல்லது மகளிர் குழுக்களாலோ நடத்தப்படும். இது அவர்களுக்கு வேலைவாய்ப்பையும் பெருக்கும். தமிழ்நாடு முழுவதும் இத்தகைய புதிய விற்பனைக் கடைகள் திறக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**குடிநீர் வசதி**

வீடு, உணவு, குடிநீர்ப் பிரச்சினை, விளக்கு ஆகிய பிரச்சினைகளை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த வசதிகள் இல்லாத கிராமங்களில் குறைந்தபட்சம் ஒரு குடிநீர்க் குழாய் அல்லது கிணறு மற்றும் தெரு விளக்கு வழங்கப்பட வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது.

அதோடு, பல்வேறு காரணங்களால், குடிநீர்த் திட்டம், தெருக்கள், விளக்குகள் ஆகியவற்றின் பராமரிப்பு பாதிக்கப்பட்டு இருப்பதாக என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. பொருள் பற்றாக்குறை, பல்வேறு இலாக்காக்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்புப் பிரச்சினை, கண்காணிப்புக் குறைவு ஆகியவை காரணமாகத் தான் பராமரிப்புப் பணிகள்

பாதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொதுக் குடிநீர்க் குழாயிலும் தண்ணீர் வருகிறதா தெரு விளக்குகள் எரிகிறதா என்பதைத் தவறு ஏற்படாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் கண்காணிக்க வேண்டும்.

**சோதனை நடத்த வேண்டும்**

கிராமப்புறச் சாலைகள் மீது உங்கள் தனிக் கவனம் தேவை. அவற்றை மேம் படுத்தவும், பராமரிக்கவும் தனிப்பட்ட முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

பொதுச் சொத்துக்களைச் சரியான முறையில் பாதுகாப்பது அரசாங்கத்தின் முதன்மைப் பொறுப்பு ஆகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சுதந்திரமாகச் சோதனை நடத்தி, குறைபாடுகளைச் சரி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஆதிதிராவிடர் நலன்**

அடிப்படை வசதிகளில் உள்ள பற்றாக் குறைதான் ஆதிதிராவிடர்களுக்கும் மற்ற சமூகத்தினருக்கும் இடையே மோதல் ஏற் படுவதற்குக் காரணம் ஆகும்.

ஆதிதிராவிடர்கள் தனிமைப்படுத்தப் படுவதை ஒழிப்பதற்காக ஆதிதிராவிடர் களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கும் மிகப்பெரிய திட்டம் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி குடிநீர் விநியோகம், தெரு விளக்கு, சாலை வசதிகள் ஆகியவை வழங்கப்படும். இந்தத் திட்டம் இந்த ஆண்டு இறுதியில் முடிவு அடையும். இந்த ஆண்டு, 30 ஆயிரம் ஆதிதிராவிடர் களின் குடியிருப்புகளை மேம்படுத்துவதற் காக ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டது. இது தொடர்பாக நாம் ஒருங்கிணைந்த செயல் பாட்டு முறையைக் கைக்கொள்ள வேண்டும்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், அனைத்துத் தொகுப்பு வீடுகளுக்கும் குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், மின்சாரம் ஆகியவை வழங்கப்படும். இந்தத் திட்டம் 1996-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவு அடையும்.

**நவம்பர் மாதம் பஞ்சாயத்து தேர்தல்**

வருகிற அக்டோபர், நவம்பர் மாதத்தில் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி மாநிலத் தேர்தல் ஆணையத்தை அரசு கேட்டுக் கொண்டு உள்ளது. சுமுகமான முறையில் தேர்தலை நடத்த மாவட்ட நிர்வாகம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

சமூகத்தில் அமைதியும் ஒழுங்கும் இருந்தால்தான் முன்னேற்றப் பணிகள் நடைபெற முடியும். எனவே, என்ன விலை கொடுத்தாலும் பொது ஒழுங்கைக் காப் பாற்ற வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

**எதிர்க்கட்சிகள் புகார் ஆதாரமற்றது**

எதிர்க்கட்சிகளின் ஜனநாயகமுறைப் போராட்டங்களை இந்த அரசு நசுக்குவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இது உண்மைக்கு மாறானது.

பிற கட்சியினைச் சேர்ந்த மூத்த தலைவர்கள்கூட தனிப்பட்ட முறையில் முற்றிலும் ஜனநாயகத்துக்குப் புறம்பாகத் தாக்கிப் பேசினாலும் அவை எல்லாம் அனுமதிக்கப்படுகிறது. பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தப்படும்என்றும் மாமூல்வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் வன்முறை கட்ட விழ்த்து விடப்படும் என்றும் உறுதியான தகவல் கிடைக்கும்போது மட்டும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மொத்தத்தில் நம் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கெடாமல் இருப்பது மகிழ்ச்சிக்கு

**நம்பிக்கை இல்லாமல் செய்யும் முயற்சி, அடிவாரம் இல்லாத கிணற்றை ஆழம் காண முயற்சி செய்வதற்கு ஒப்பாகும்.**


**—அண்ணல் காந்தியடிகள்**

உரியது. இதற்குக் காரணமான போலீசை நாம் பாராட்ட வேண்டும். அவர்கள் உயிருக்கு ஏற்படும் ஆபத்தையும், எதிர்ப்பு களையும் பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆனால், சமீபத்தில் நடந்த வெடிகுண்டுச் சம்பவங்களை நாம் எளிதில் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இந்தச் சம்பவங்களில் சிலவற்றின் பின்னணி யில் மதவாதம் இருப்பது சந்தேகிக்கப் படுகிறது. மதவாதம் என்னும் பயங்கரமான தீய சக்தி பரவாமல் தடுக்க வேண்டும். இந்தச் சக்திகளுக்கும் போதை மருந்து கடத்தல் மற்றும் அன்னியச் சக்திகளுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி விசாரணை நடத்தி இந்தச் சக்திகளை வேரறுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறினார்.

தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பிற்பகலில் காவல்துறை அதிகாரிகள் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமை உரையாற்றினார். பின்பு காவல்துறை அதிகாரிகள் தங்கள் கருத்துக்களைத் தெரி வித்தனர். அந்தந்த மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்தும், பொதுவான பிரச்சினைகள் குறித்தும் அவர்களுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவா தித்தார்.



**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, சென்னையில் உள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் திரு யுசுகி கக்கூ அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார் (30.8.95)**

# காவல்துறையின் தகவல் நுட்பங்களை மேம்படுத்த சென்னையில் ரூ.350 கோடி செலவில் டிஜிடல் டிரங்க் ரேடியோ!

## மாண்புமிகு முதல்வர் தகவல்

சென்னையில் தலைமைச் செயலகத்தில் 23.8.95 அன்று நடந்த காவல்துறை அதிகாரிகள் மாநாட்டைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசிய தாவது:

போலீஸ் படையினர் திறமை மற்றும் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் தகவல் நுட்பங்களை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

மாவட்டங்களுக்கு இடையே தகவல் தொடர்பை ஏற்படுத்த டிஜிடல் மைக்ரோ வேவ் முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

உடனடியாகத் தகவலைப் பெற்று உடனடி நடவடிக்கைகளை எடுக்க வசதியாக சென்னையில் 3.5 கோடி ரூபாய் செலவில் டிஜிடல் டிரங்க் ரேடியோ முறையை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்குள் போலீஸ் நிலையங்களிலிருந்து மாநிலப் போலீஸ் தலைமை அலுவலகம் வரை அனைத்து மாவட்டங்களிலும் கம்ப்யூட்டர் வசதி ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

சப்-இன்ஸ்பெக்டர் வேலைகளுக்கான நேரடித் தேர்வில் 20 சதவிகித இடங்களைத் தேவையான கல்வித் தகுதிகளோடு ஐந்து ஆண்டு அனுபவம் உள்ள காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்காக ஒதுக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளேன்.

மேலும், 600 சப்-இன்ஸ்பெக்டர் பதவி களைத் தலைமைக் காவலர்களாக இருப்பவர் களுக்குப் பதவி உயர்வு அளித்து நிரப்ப வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளேன். மேலும், 26 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறக்க ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. 24 பெண் போலீஸ் இன்ஸ் பெக்டர்கள், 145 பெண் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் பதவிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

காவல் துறையினருக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள் உண்மையிலேயே அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கவனிக்க போலீஸ் டைரக்டர் ஜெனரல் அலுவலகத்தில் ஒரு மூத்த அதிகாரி மாவட்டப் போலீஸ் நல அதிகாரி என்று நியமிக்கப்பட உத்தர விட்டுள்ளேன்.

அந்த அதிகாரி மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதைக் கண்காணித்து ஆய்வு நடத்துவார். போலீசாருக்கான நலத் திட்டங்களில் மாவட்டப் போலீஸ் சூப்பிரண்டெண்டுகள் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

நமது மாநிலத்தில் மோட்டார் வாகன

விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருகிறது. இத்தகைய விபத்துக்களைப் புலனாய்வு செய்யும் அதிகாரிகள், பாதிக்கப் பட்டவர்கள் போதுமான இழப்பீட்டைப் பெறும் வகையில் முதல் தகவல் அறிக்கை, அந்த விபத்தில் ஈடுபட்ட வாகன உரிமையாளர் பற்றிய தகவல், இன்சூரன்சு கம்பெனி பெயர் போன்றவற்றைப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மாவட்டச் சட்ட உதவிக் கமிட்டிக்கும் வழங்கி, புலனாய்வை வேகமாக முடிக்க வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

இதில் – உத்தரவு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று இன்னமும் புகார்கள் வருகின்றன.

மாவட்டப் போலீஸ் சூப்பிரண்டெண்டுகள் இதைத்தீவிரமாகக்கண்காணித்துப் பாதிக்கப்பட்டவர்கள் எந்தவிதத் தாமதமும் இல்லாமல் இழப்பீட்டுத் தொகை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்:

# நட்டுவாங்கப் பயிற்சிபெற மானியம் வழங்கும் திட்டம்

இன்று உலகம் போற்றும் பரதநாட்டியம் தமிழகத்திற்கே உரிய ஓர் ஒப்பற்ற நடனக் கலையாகும். பரதநாட்டியம் பயிலுவதில் ஆர்வம்காட்டும் அனைவரும் அக்கலைக்கு உயிர்மூச்சான நட்டுவாங்கம் பயிலுவதில் ஆர்வம் காட்டாமல் இருப்பதென்பது ஊர் அறிந்த உண்மை. இந்நிலை இனியும் தொடரக் கூடாது என்பதற்காகவும், இளங்கலைஞர்கள் நட்டுவாங்கக் கலையில் தகுந்த பயிற்சி பெறவேண்டும் என்பதற்காகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூலமாக நட்டுவாங்கப் பயிற்சி பெற மானியம் வழங்கும் திட்டம் ஒன்றினை 1993-ஆம் ஆண்டு அறிவித்தார்கள்.

1993-94-ஆம் ஆண்டிற்குத் தகுந்த வல்லுநர்களைக் கொண்டு 15 மாணவிகளுக்குச் சிறப்பான பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து 1995-96-ஆம் ஆண்டிற்குப் பின்வரும் பாணிகளில் புகழ்பெற்ற பரதநாட்டிய ஆசிரியர்களால் ஆசிரியர் ஒருவருக்குச் சிறந்த மூன்று மாணவிகள் வீதம் தேர்வு செய்யப்பட்டு செப்டம்பர் முதல் தேதியில் இருந்து தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற வளாகத்தில் பயிற்சி அளிக்கப் பட்டு வருகின்றது.

திரு. சீத்தாராம சர்மா - கலாஷேத்திரா பாணி

திரு. உடுப்பி லட்சுமிநாராயணன் காஞ்சிபுரம் - எல்லப்பா பிள்ளை பாணி

திரு. எஸ்.கே. காமேஸ்வரன் - வழுவூரார் பாணி

திருமதி. இந்திரா ராஜன் - பந்தணைநல்லூர் பாணி

திருமதி. ரேவதி இராமச்சந்திரன் மெலட்டூர் பாணி

பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கும், பயிற்சிபெறும் மாணவிகளுக்கும் மதிப் பூதியம் மற்றும் உபகாரச் சம்பளம் வழங்கப்படுகின்றது.



# படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் சந்தித்துப் பேசினார்கள். இந்தச் சந்திப்பின்போது, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு கே. பொன்னுசாமி, தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர் (18.8.95)




கிரீஸ் நாட்டு இளவரசி ஐரின் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். (30.8.95) இந்தச் சந்திப்பின்போது, தமிழக அரசு செயல்படுத்திவரும் சமூகநலத் திட்டங்கள், சுகாதாரத் திட்டங்களுக்கு, கிரீஸ் நாட்டு இளவரசி அவர்கள் தமது மனமுவந்த பாராட்டைத் தெரிவித்தார்.

முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு, ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கிரீஸ் நாட்டு இளவரசி அவர்கள் வழங்கினார்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பழம்பெரும் கோயில்களைப் புனரமைப்பு செய்து, அவற்றைப் பராமரிக்கும் திட்டத்துக்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கிரீஸ் நாட்டு இளவரசி அவர்கள் பாராட்டு தெரிவித்தார்.

சிறு சேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்
# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சிறப்பு அம்சங்கள்

- 5 $^{1}/_{2}$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

**ஆணையர்**, சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

**மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்**, சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

**மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,**

**வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள்** மற்றும் **சிறுசேமிப்பு முகவர்கள்.**


**இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,**

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95



# குமரித் தந்தை மார்ஷல் நேசமணி நூற்றாண்டு விழா

'குமரித் தந்தை' என்று குமரி மாவட்ட மக்களால் போற்றப் படுபவர் மார்ஷல் நேசமணி அவர்கள். கன்னியாகுமரி மாவட்டம், பள்ளியாடி கிராமத்தில் அப்பலோஸ் - ஞானம்மாள் தம்பதியினருக்கு 1895-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி அவர் பிறந்தார். கல்வியில் தலைசிறந்து விளங்கிய அவர், முதலில் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்பு சட்டக் கல்லூரியில் பயின்று தலைசிறந்த வழக்கறிஞர் ஆனார்.

மக்கள் நலனில் அதிக ஆர்வம் கொண்ட மார்ஷல் நேசமணி, திருவிதாங்கூர் கொச்சி ராஜ்ஜியத்தின் கீழ் இருந்த தற்போதைய குமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைக்கப் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டார். திருவிதாங்கூர்-தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்து அந்தப் போராட்டம் தீவிரம் அடையவும் வழிவகுத்தார்.

1948 முதல் 1955 வரை இடைவிடாது நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக, 1956-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் நாள் தாய்த் தமிழகத்துடன் இணைந்து, குமரி மாவட்டம் உதயமானது.

## நெஞ்சில் நிறைந்தவர்

குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணையவும், குமரி மாவட்ட நலன் காக்கவும், மார்ஷல் நேசமணி ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை. போராட்டக் காலத்தில் உடல் நலம் குன்றிய போதிலும், கடைசி நிமிடம் வரை மன உறுதி குன்றாமல் வாழ்ந்த நேசமணி அவர்கள், 1968-ஆம் ஆண்டு மரணம் அடைந்துவிட்டார் எனினும், தான் ஆற்றிய மக்கள் பணியால், செயற்கரிய செயலால், குமரி மாவட்ட மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிறைந்து நிற்கின்றார்.

மார்ஷல் நேசமணி அவர்கள், குமரி மண்ணில் பிறந்து 100 ஆண்டு ஆகிறது. இதையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட ஆணை பிறப்பித்து, அன்னாரின் புகழுக்கு மகுடம் சூட்டினார்.

குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாட ஆணை பிறப்பித்து புகழுக்குப் புகழ் சேர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் குமரி மாவட்ட மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்.

இதன் அடிப்படையில், அரசு சார்பில் 'குமரித் தந்தை' மார்ஷல் நேசமணி அவர்களின் நூற்றாண்டு விழா 19.8.95 அன்று குமரி மாவட்டம் தக்கலையில் உள்ள காமராஜர் பேருந்து நிலைய வளாகத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

## விழாக் கோலம்

மாவட்டம் முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது. மார்ஷல் நேசமணி அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாட ஆணைபிறப்பித்துச் சிறப்புச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, வண்ண வண்ணச் சுவரொட்டிகள் எங்கும் ஒட்டப்



பட்டிருந்தன. தக்கலையில் இரவைப் பகலாக்கும் வண்ண வண்ண விளக்குகளும், அலங் கார வேலைப்பாடுகளுடன் கூடிய மின் விளக்குக் கோபுரங் களும் பார்த்தவர்களைமகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. பல்லாயிரக் கணக்கான மக்கள் இவ்விழா விற்கு வருகைதந்து கண்டு களித்தனர்.

விழாவையொட்டி **19.8.95** அன்று மாலை **3.00** மணிக்கு நேசமணி போக்குவரத்துக் கழகக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 'மக்கள் தலைவர் மார்ஷல் நேசமணி' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடை பெற்றது.

இக்கருத்தரங்கிற்குப் பேரா சிரியர் ஐசக் அருமைராஜ் தலைமை வகித்தார். 'பாரா ளுமன்ற வித்தகர்' என்ற தலைப்பில் பேராசிரியர் கே. முகமது பருக் அவர்களும், 'ஒரு வரலாற்றின் தொடக்கம்' என்ற தலைப்பில் பேராசிரியர் வி.எம்.ஏ. சுரேந்திராவும், 'விடுதலை வீரர்' என்ற தலைப்பில் புலவர் என். பாலரசும், 'ஒடுக்கப் பட்டோரின் வழக்கறிஞர்' என்ற தலைப்பில் பேராசிரியை ஜாஸ்மின் ஆசீரும், 'புதிய சிற்பி' என்ற தலைப்பில் டாக்டர் பி. பத்மனாபன் தம்பி யும் உரையாற்றினார்கள்.

## சிறப்புக் கூட்டம்

அதன்பின் மார்ஷல் நேசமணி அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இவ்விழாவுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். ராஜகோபால், இ.ஆ.ப., வர வேற்றுப் பேசினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரை ஆற்றினார்.

விழாவில், குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவினையொட்டி, மார்ஷல் நேசமணிக்குப் புகழ் சேர்க்கும் வகையில் அன்னாரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி அமைக் கப்பட்டிருந்தது.

இக்கண்காட்சியை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் திறந்து வைத்தார்.

குமரி மாவட்டம் தாய்த் தமிழ கத்தோடு இணையப் பாடுபட்ட தியாகிகள் 107 பேரை மேடைக்கு அழைத்துப் பொன்னாடை போர்த்தி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கவுரவித் தார்கள்.

இதைப்போன்று நேசமணி யின் திருவுருவப் படத்தைச் சிறப்பான முறையில் வரைந்த ஓவியர் திரு விஜய் நாராயண

னுக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.

**அமைச்சர்கள் உரை**

இவ்விழாவிற்குத் தலைமை வகித்து மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

'குமரி மாவட்டத்தைத் தமிழகத்துக்கு மீட்டுத்தந்து மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மார்ஷல் நேசமணிக்குப் புரட்சித் தலைவி அரசு விழா எடுத்திருக்கிறது. புகழுக்கும், பாராட்டுக்கும் உரியவர்களை இந்த அரசு பெருமைப்படுத்த என்றும் தவறியது இல்லை. இதற்கு இந்த விழா ஒரு நல்ல உதாரணம் ஆகும்.

"மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மார்ஷல் நேசமணி போன்று மன உறுதி படைத்தவர். உச்சியில் இருப்பவர்களைக் கண்டும் அச்சப்படாதவர். இமய மலையை அசைத்தாலும் அசைக்கலாம்: ஆனால், தமிழக மக்களின் இதயத்தில் இருந்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை எந்த விதத்திலும் அசைக்க முடியாது. எந்தத் துரோகத்தாலும் அவரது ஆட்சியை வீழ்த்தவோ குன்றாப் புகழுக்குக் குறை ஏற்படுத்தவோ முடியாது."

விழாவில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள் பேசியதாவது:

"குமரி மாவட்ட மண்ணில் இருந்து விடுக்கப்படும் அனைத்துக் கோரிக்கைகளையும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு நிறைவேற்றத் தயாராக இருக்கிறது. மார்ஷல் நேசமணியின் உருவப் படத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்க ஆவன செய்யப்படும். குமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைக்கப் பாடுபட்ட தியாகிகளின் பிரச்சினைகளை வருகிற செப்டம்பர் 14-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நேரில் அறிந்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்படும். மார்ஷல் நேசமணி பிறந்த ஊரான பள்ளியாடியில் உள்ள ரெயில் நிலையத்துக்குக் குமரித் தந்தை மார்ஷல் நேசமணியின் பெயரைச் சூட்ட மத்திய அரசு முன்வர வேண்டும்".

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

---

**ஓர் இலையின் மேலுள்ள பனித்துளி போல, உனது வாழ்க்கை, காலத்தின் விளிம்புகளில் நடனமாடிக் கொண்டிருக்கட்டும்.**

**—கவிஞர் தாகூர்**

---

"இ.காங்கிரசார் நேசமணியை மட்டுமல்ல ; காமராஜரையும், மகாத்மா காந்தியையும் மறந்து விட்டார்கள். தேர்தல் நேரத்தில் மட்டும் ஓட்டுக்காக அவர்களைப் பற்றி வேண்டாவெறுப்பாக நினைப்பார்கள். மேடைகளில் பேசுவார்கள்.

"இவர்கள்தான் தமிழ் நாட்டில் மீண்டும் காமராஜர் ஆட்சியை அமைப்போம் என்கிறார்கள். காமராஜர் குடும்பத்துக்கு அவர்களால் உதவி செய்ய முடியவில்லை. ஆனால், மனித நேயத்தோடு அவர்களுக்கு உதவிய புரட்சித்தலைவியின் செயலையாவது பாராட்டினார்களா? என்றால் அதுவும் இல்லை."

நேசமணி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசியதாவது:

"தமிழ்நாட்டில் பல்வேறு முதல் அமைச்சர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள். ஆனால், இந்த மாநிலத்தில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது இன்றைய முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்தான். இந்த அரசு விடுதலை பெற, தங்களை வருத்திக் கொண்ட தியாகிகளை மதிக்கின்ற அரசு. அதனால்தான் அவர்களின்உதவித்தொகையை ரூ.1,500 ஆக உயர்த்தியது. ஆனால், மத்திய அரசு இன்னும் இதுபோன்ற அறிவிப்பை வெளியிடவில்லை.

'தமிழக வரலாற்றில் தங்களுக் கென்று தனி இடத்தைப் பிடித்த காயிதெ மில்லத், வள்ளலார், இராமசாமி படையாட்சியார், திருவள்ளுவர் போன்றோரின் பெயரால் மாவட்டங்கள் உரு வாக்கப்பட்டுள்ளன.

"தகுதி உள்ளவர்களை மதிக் கின்ற இந்த அரசு அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முன்னேற்றி வருகிறது. குறிப் பாகத் தொழில்துறை, போக்குவ ரத்துத் துறை, கல்வித் துறை போன்றவற்றில் விரைவான வளர்ச்சியினை எட்டியுள்ளோம். மார்ஷல் நேசமணியின் படம் அனைத்து நேசமணி போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளிலும் விரைவில் வைக்கப்படும்."

**நலத்திட்ட உதவிகள்**

விழாவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 15 பேருக்கு ரூபாய் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 450 மதிப்புள்ள கடன் உதவி அளிக் கப்பட்டது. நலிந்தோர் நிவா ரணத் திட்டத்தின் கீழ் தலா ரூ.5 ஆயிரம் வீதம் 10 பேருக்கு 50 ஆயிரமும், குமரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி சார்பில் 99 பேருக்கு, ரூ.5 இலட்சத்து 44 ஆயிரத்து 750 மதிப்புள்ள கடன் உதவி களையும், இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள் வழங்கினார்.

உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி, மற்றும் கல்லூரி களுக்காகத் தனித்தனியாக நடை பெற்ற பேச்சுப்போட்டி,

## இளைஞர்க்கு இனிய மொழிகள்

**அறிவு:**

'அறிவுக்கு இந்த வையகம் எப்போதுமே தன் வணக்கத்தைச் சொல்லும். திறமைக்கு ஆதர வைத் தரும். தூய உள்ளமதை வரவேற்கும்'.

**மனிதன்:**

'மனிதன் தன் மனதில் எழும் வினாக்களுக்கு தனக்குத் தானே பதில் அளிக்கக்கூடிய பயிற்சியைப் பெற வேண்டும். மனிதன் பகுத்தறிவு படைத்த வனாக உருவாக வேண்டும்.

**நம்புவதும் செய்வதும்:**

'ஏன்? எதனால்? எப்படி? எதற்காக?' என்ற கேள்விக் குறிகளை நிறுத்தி சரியான விடை, பகுத்தறிவுக்கு ஏற்ற பதில் கிடைத்த பிறகே எதையும் செய்யவேண்டும்.

கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவி களுக்கான பரிசுகளை மாண்புமிகு அமைச்சர் பெரு மக்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் திரு எஸ். ஆஸ்டின், எம்.பி., டாக்டர் அம்ம முத்துப்பிள்ளை, எம்.எல்.ஏ., திரு அப்பு நடேசன், எம்.எல்.ஏ., தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு எப்.எம். இராஜ ரெத்தினம், குமரி மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கவிஞர் டி. சதாசிவம், பால் வளத் தலைவர் திரு எல். நீல கண்டன் ஆகியோர் பேசி னார்கள்.

விழா முடிவில், மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு எஸ்.எம். பஷீர் நன்றி கூறினார். விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (வெளியீடு) திரு இரா.பா. கார்மேகம் அவர்கள் கலந்துகொண்டார்.

விழாவில் கடைசியாகத் திரைப்பட இசை அமைப்பாளர் திரு சங்கர் கணேஷ் குழு வினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் பல்லாயிரக்கணக் கான மக்கள் கலந்து கொண்டனர். பெண்கள் அதிக அளவு வந்திருந்தனர்.

**—எஸ்.எம். பஷீர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**நாகர்கோவில்**

# தமிழ்கூறும் நல்லுலகம்

## திரு சேடபட்டி இரா. முத்தையா

**மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்**

முச்சங்கம் நடந்து தமிழ் வளர்த்த பின்னர், முச்சங்கமும் மருவிய காலத்தில் வள்ளல் பாண்டித்துரையார் தொடங்கிய 4ஆம் தமிழ்ச் சங்கமும் நடைபயிலுகிற மதுரையிலேயிருந்து வந்தவன் என்கிற அந்த ஒரு உரிமை, தகுதி, ஏனைய தகுதிகளால்- எளியோனாகிய என்னை இந்த மகத்தான விழா நிகழ்ச்சியின் மாநாட்டில் அமர்த்தி அழகு பார்த்துக் கொண்டிருக்கிற நம்முடைய வணக்கத்திற்குரிய என்னுடைய தாய்க்கு என் தனி வணக்கம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சைத் தரணி, வரலாற்றுக் காலத்திலே யிருந்து இதுவரையிலேயும் நாம் கேள்விப் பட்டவரையில் மூன்று பெரும் விழாக்களைக் கண்டதாகக் குறிப்பிடலாம்.

ஒரு விழா, இந்தத் தரணியை ஆண்ட இராஜராஜனுடைய பட்டாபிஷேகம் மிகப் பெரிய அளவிலே நடந்தது; அதை இந்த நகரம் கண்டிருக்கலாம்.

அதன் பின்னர், அவர் கட்டிமுடித்த தஞ்சைப் பெரிய கோவிலுடைய குடமுழுக்கு விழா, மிகப் பெரிய அளவில் சீரோடும் சிறப்போடும் நடந்திருக்கலாம்; அது இரண்டாவது விழா.

ஆனால், அந்த இரண்டு விழாக்களிலுமே அதிகபட்சம் சோழ நாட்டு மக்கள் மட்டுமே கூடியிருந்திருப்பார்கள். ஆனால் மூன்றாவதாக- நம்முடைய தங்கத் தலைவி நடத்தியிருக்கிற இந்த 8-ஆம் உலகத் தமிழ் மாநாட்டிலேதான் சோழ நாடு மட்டு மல்லாமல், சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாடுகளிலேயிருந்து தமிழகமே கூடியிருக் கிறது என்பதோடு, தமிழ்கூறும் நல்லுலகமே கூடியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூற ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்கு - அந்த இரண்டு விழாக்களையும் விஞ்சுகிற அளவிற்கு உலகத் தமிழன் இன்றைக்கு இறும்பூது எய்தி நிற்கிற அளவிற்கு இந்த விழா நடைபெற்று முடிந்திருக்கிறது.

நம்முடைய என்றுமுள செந்தமிழாம் தாய்த் தமிழை, இலக்கண இலக்கியச் செறிவோடு வளர எருவிட்டு வளர்த்தவர்கள் எண்ணற்றவர் ஆவர்.

சங்க காலத்திலேயிருந்து அந்த வரிசை யினரை எடுத்துக்கொண்டால் - சங்ககாலத் திற்கும் முற்பட்ட காலத்திலிருந்தே அந்த வரிசை தொடங்கும். அந்த வகையில் அந்த வரிசையினர்களில் ஒல்காப்புகழ் தொல் காப்பியன் இருந்தான்; வான்புகழ் வள்ளுவன் இருந்தான்; வார்த்தைகள் வாரி வழங்கியதில் வள்ளலாகத் திகழ்ந்த கம்பன் இருந்தான்; கவி காளமேகம் அங்கு இருந்தான்; கண்ணகிக்குச் சிலை வடிக்க வடக்கிலிருந்து கல்கொணர்ந்த சேரன் செங்குட்டுவன் தம்பி இளங்கோ இருந்தான்; தமிழ் மூதாட்டி ஔவை இருந்தார். இன்னும் வரிசைப்படுத்திக் கொண்டே சென்றால் அரிசில்கிழார், அஞ்சில்-ஆந்தையார், அறிவுடை நம்பி, ஆலந்தூர்க்கிழார், ஆந்தையார், இளங்கீரனார், இளையனார், ஒக்கூர் மாசாத்தியார், ஒண்சாத்தன்,

கருவூர்க்கிழார், கபிலர், கணியன் பூங்குன்றனார், காக்கைபாடினியார், கூலவாணிகன் சாத்தனார், கூடலூர்க்கிழார், கோப்பெருஞ்சோழர், கோவூர்க்கிழார், சாத்தனார், சீத்தலைச் சாத்தனார், சேந்தன் பூதனார், நச்செள்ளையார், நப்பசலையார், நல்மகனார், நெற்றிக்கண் திறப்பினும் குற்றங்குற்றமே என இறைவனுடனேயே சொற்சிலம்பமாடிய நக்கீரனார், நாகனார், மதுரைக் கண்ணனார், மாங்குடி மருதனார், மாமூலனார், மோசிகீரனார், முன்னாகனார், தாமோதரனார், தாயங்கடனார், திருத்தக்க தேவர், வெள்ளிவீதியார், வள்ளலார் என இத்தனைப் பேர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்து வளர்த்த தமிழ் மூன்றும் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் எனப்படும்.

அதைத் தொடர்ந்து இவர்கள் மட்டும் அல்லாமல், தேவாரம் அருளிய அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்பாரும், திருவாசகம் தந்த மாணிக்கவாசகரும், பாடிப் பாடி வளர்த்த தமிழ், மூன்று தான். இயல், இசை, நாடகம். பின்னாளில், ஆழ்வார்களும், நாயன்மார்களும் இருந்து வளர்த்த தமிழும் இந்த நூற்றாண்டில் நாம் அறிந்த எட்டயபுரத்துத் தலைப்பாகைப் புலவன் பாரதியும், அவன் தாசன் பாவேந்தனும், அள்ள அள்ளக் குறையாத பாட்டுச் சுரங்கங்களைத் தந்து சென்ற பட்டுக்கோட்டையாரும், கண்ணதாசக் கவியரசனும் யாத்துத் தந்த தமிழும் மூன்றுதான்; இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்.

அயல்நாட்டுப் பிரஜையாகப் பிறந்திருந்தாலும், தமிழுக்கு அருந்தொண்டாற்றிய கால்டுவெல் – போப்பும், அணிக்கு அணி சேர்ப்பதில் முன்னின்ற இந்த நூற்றாண்டினுடைய தனிப்பெரும் தமிழ்ச் சான்றோர்களான மறைமலை அடிகளும், உ.வே.சா.வும், வேங்கடசாமிநாட்டாரும், பசுமலை பாரதியும், மு.வ.வும், தேவநேயப்பாவாணரும், இலக்குவனார், ஔவை, இராசமாணிக்கனார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. என எண்ணற்ற இத்தகைய சால்புமிக்க சான்றோர்களும், கூடி வளர்த்த தமிழும் மூன்றுதான்; இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்.

அடுத்து, இந்தப் பேரன்பர்களிடத்தில் அழுத்தமான பிடிப்புக் கொண்டிருந்த எழுத்துச் சீர்திருத்தம் தந்த, தந்தை பெரியார், முத்துத் தமிழ் காப்பே என் முதற்கடமை என முழங்கிய பேரறிஞர் அண்ணா, அந்த அண்ணாவின் இதயக் கனியாம் நம் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய இந்த நூற்றாண்டின் எடுத்துக் காட்டான இந்தத் தலைவர்கள் கண்டதும், கேட்டதும், வளர்த்ததும் மூன்று தமிழ்தான்; இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ், மங்காத் தமிழ், சீரிளமை சிதையா திறன்மிகு தமிழ், முத்தமிழ்தான். இன்றைக்கு நான்காம் தமிழ். ஆமாம், பெரியவர்களே! அறிவியல் தமிழ்.

இந்த மாநாட்டின் மூலம் பெற்றுள்ளோமே அதைப் பெற்றெடுத்த தாய்தான் நம் தாய், மாணிக்கத் தாய், மாசறு மரகதத்தாய், மங்காப்புகழ் மிக்க புரட்சித் தாய், சிங்கநகர் தாய், தங்கத் தமிழகத்தை ஆளும் தமிழர் தாய், நம் மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்கள்.

ஈராயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த இந்த முத்தமிழ், இன்றைக்கு நான்காம் தமிழையும் தன்னோடு இணைத்துக் கொள்கிற சிறப்பைப் பெற்றிருக்கிற இந்தச் சிறப்பைத்தான் இந்த மாநாட்டின் மூலம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் நாட்டுக்கு வழங்கியிருக்கிறார்கள். நாளைக்கு இந்த மாநாட்டின் மூலம் நீங்கள் என்ன சாதித்தீர்கள் என்று எவரேனும் கேட்பார்களேயானால், நம்முடைய தோழர்கள் நெஞ்சுயர்த்திச் சொல்லலாம்– "நாங்கள் கண்டிருப்பது அறிவியல் தமிழ்" என்று ஆணித்தரமாகச் சொல்லக்கூடிய ஒரு சாதனையை, இந்த மாநாட்டின் மூலம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்படி, ஈராயிரம் ஆண்டுகளாக

இல்லாத சிறப்பை இந்த மாநாடு, இன்றைக்குப் பெற்றிருக்கிறது என்பதுதான் இந்த எட்டாவது தமிழ் மாநாடு- எட்டாவது புகழை எட்டியிருக்கிறது என்பதற்குரிய எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு காலகாலமாக, இவ்வளவு புலவர்களும், இவ்வளவு தலைவர்களும் இருந்து செய்யமுடியாததை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் செய்கிறேன் என்று துணிந்து அறிவித் திருக்கிறார்கள் என்று சொன்னால், எடுத்த காரியத்தைச்செய்து முடிப்பதில் வெற்றியைத் தவிர வேறொன்றைக் கண்டறியா அந்தத் தலைவியாலே முடியும் என்கிற காரணத் தினாலேதான், இன்றைக்கு இவ்வளவு பெரிய முயற்சியில் இந்த மாநாட்டில் நாம் ஈடுபட்டு இருக்கிறோம். இப்படி நான்காம் தமிழாக அறிவியல் தமிழை இன்றைக்கு வழங்கியிருப்பதோடு கூட, தாய்த் தமிழைக் காப்பதற்கு முன்நின்றவர்களை இந்த மாநாட்டின் மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கிய அன்றைக்கே சிறப்புச் செய்து, முத்துத் தமிழ் காப்பதிலே நான் முன்நிற்பேன் என்பதையும் அறிவித் திருக்கிறார்கள்.

'தீந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின்னர், இந்தத் தேகம் இருந்து ஒரு லாபம் உண்டோ'? என முழங்கி அன்றைக்கு மொழிப் போராட்டத்தில் தங்களுடைய தேக்குமர தேகத்தைத் தீயிலே வைத்துக்கொண்டு சந்தனம் மணப்பது போல் எரிந்து செத்தார்களே- தீரன் சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன், சத்தியமங்கலம் முத்து, கீரனூர் முத்து, ஆசிரியர் வீரப்பன், மாணவ மாவீரன் மாயவரம் சாரங்கபாணி, அண்ணாமலை நகர் இராசேந்திரன் - இந்தத் தியாக தீபங் களுடைய குடும்பங்களை அழைத்து - இப்போது மூன்றாவது தலைமுறைக்குக் கூட சில குடும்பங்கள் வந்துவிட்டார்கள், அந்தக் குடும்பங்களையும் இன்றைக்கு அழைத்து வைத்து, இந்த மாநாட்டின் மூலம் சிறப்புச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் தமிழ்க் காப்பில் முன்னணியிலே நான் நிற்பேன், தமிழ் மொழியைக் காப்பேன் என்கிற அந்தச் சூளுரையையும் இந்த மாநாட்டின் மூலம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறில்லை. அந்த அளவுக்கு, சிறப்புக் குரிய இந்த மாநாட்டின் மூலம் எண்ணற்ற சிறப்புகள் பலவற்றைச் சேர்த்திருக்கிற இந்தச் சீரிய பல முயற்சிகளுக்கிடையிலேதான், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தமிழ் வளர்ச்சி ஒரு பணி, தமிழ்க் காப்பு இன்னொரு பணி என்கிற வகையில் இன்றைக்குத் தொடங்கியிருக்கிற இந்தத் தொடக்கம் நிச்சயம் வெற்றிபெறும்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, இங்கே வருகை புரிந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் அவர் களுடைய நிறைவுரையோடு நிறைவு பெறவிருக்கிறது. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு முடிகிறது. ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாட்டை எங்கோ ஒரு நாட்டில் நடத்துவார்கள். ஆனால், அடுத்து என்றைக்கு உலகத் தமிழ் மாநாடு தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கிறதோ, அன்றைக்கும் - அந்த மாநாட்டையும், நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள்தான் நடத்துவார்கள் என்பதற்குரிய சாதனைதான் நான் சொன்ன அந்த நான்காம் தமிழான அறிவியல் தமிழையும் இந்த மாநாட்டின் மூலம் நமக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிற சாதனையாகும்.

இப்படிப்பட்ட சாதனைகளுக்கு மத்தியிலேதான், இன்றைக்கு வெள்ளம் போலத் திரண்டிருக்கிற இந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து, "இங்குள்ள தமிழர்கள் ஒன்றாகக் கண்டு எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் என்று ஊது, ஊது சங்கே" என்று பாவேந்தன் பாரதிதாசனுடைய சங்கொலி முழக்கத்தை முழங்கவேண்டியிருக்கிறது.

அந்த வகையில் 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்ற நாதத்தை முழங்கி மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய இந்த மகத்தான சாதனையைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றைக்கும் வாழ்த்தும், வணங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# இராமநாதபுரம் மாவட்டத்தில்

# காயிதெமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் நூற்றாண்டு விழா

இராமநாதபுரம் மாவட்டம் வெளிப்பட்டிணத்தில் 27.8.95 அன்று தமிழக அரசின் சார்பில் காயிதெமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் பிறந்தநாள் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாத் தலைமை யேற்றார். மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வ. சத்தியமூர்த்தி அவர்கள் காயிதெமில்லத் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் அவர்கள், காயிதெமில்லத் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

விழாவில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சான்வத்ராம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

விழாவில், தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அனைத்திந்தியப் பொதுச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது, சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், இராமநாதபுரம் மாவட்டத் திருக்கோயில் களின் நிர்வாக வாரியத் தலைவர் திரு எஸ். ராஜேந்திரன், பேராசிரியர் திரு கே.எம். காதர் மொகிதீன், திரு இசட் ஜபருல்லா, தமிழ்நாடு ஹஜ் கமிட்டி உறுப்பினர் திரு எஸ்.ஏ. சீனிக்கட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கி னார்கள்.

விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

"இந்த நாட்டுக்கு யார் பெருமை தந்தார்களோ, யார் மக்கள் மனதில் நிற்கிறார்களோ அவர்களைப் பெருமைப் படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தயங்கியதில்லை. மொழிப்பற்று, தேசப்பற்றுமிக்கவர் காயிதெமில்லத். இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு ஏற்பட்டபோது, அதைத் தடுக்க முதலில் நின்றவர் அவர். சீனப் போரின்போது தனது மகனைப் போருக்கு அனுப்பியவர். இந்தியாவின் ஆட்சிமொழியாகத் தமிழ்தான் இருக்க வேண்டும் என்று முழக்கமிட்டவர். கேரளாவில் முஸ்லீம் லீக் துணையுடன்தான் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. அங்கே ஆளுபவர்கள் இவருக்கு விழா எடுப்பது பற்றி நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. செங்கோட்டையில் இருப்பவர்கள் இவரை நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால், செயிண்ட்ஜார்ஜ் கோட்டையில் இருப்பவர்தான் அவருக்கு விழா எடுத்து வருகிறார். இன்று மதவெறி தூண்டப் படுகிறது. ஓட்டு வாங்குவதற்காக மத உணர்வுகளைத் தூண்டக்கூடாது. ஒருவரின் ஜாதி பற்றிப் பேசக்கூடாது. அவர் என்ன சாதித்தார் என்பது பற்றித்தான் பேச வேண்டும்".

- விழாவில், காயிதெமில்லத் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வ. சத்தியமூர்த்தி அவர்கள் பேசியதாவது:

"இந்தியாவிலேயே மதக் கலவரம் இல்லாத மாநிலம் தமிழ்நாடுதான். அதற்குக் காரணம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருப்பதுதான். இங்கு சட்டம் ஒழுங்கு சீராக இருப்பதுதான் காரணம். அப்துல்சமது இன்று பாராட்டப் படுகிறார் என்று சொன்னால், அது காயிதெமில்லத் பாராட்டப்படுகிறார் என்றுதான் அர்த்தம்".

விழாவில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் காயிதெமில்லத் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

"புரட்சித்தலைவி அவர்கள் 'வக்ப்' வாரியத்திற்கு ரூ.70 இலட்சம் நிதி வழங்கினார். ஒவ்வொரு ஆண்டும் இந்த வாரியத்திற்காக ரூ.30 இலட்சம் நிதி வழங்க உத்தரவிட்டார். இதை இஸ்லாமிய சமுதாயம் உணர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். விண்ணப்பித்தவர்களுக்கெல்லாம் 'உலமா' பென்ஷன் வழங்க, புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டார். பென்ஷன் தொகை ரூ.250 ஆக இருந்ததை ரூ.400 ஆக உயர்த்தினார்".

— செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கே.பி. நல்லதம்பி நன்றியுரையாற்றினார்.

---

## கலப்பு மணம்

☆ "கலப்பு மணம் காதல் வழியே கூடுகிறதென்பதற்கு விளக்கவுரை வேண்டுவதில்லை. காதல்-சாதி மதம், சில நாடு முதலிய கட்டுக்களைக் கடந்தது. ஒருவன் தனக்கு ஒத்த ஒருத்தியையும் அவ்வாறே ஒருத்தி தனக்குத் தக்க ஒருவனையும் தெரிந்தெடுக்கும் உரிமையுடையது கலப்பு மணம்".

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

# சிதம்பரனார் மாவட்டத்தில் 'டோக்ரா' திட்டத்தின் மூலம் 200 மகளிர் குழுக்கள் : 2000 பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி உதவி செய்ய அரசு திட்டம்

சிதம்பரனார் மாவட்டத்தில் ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (டோக்ரா) கீழ் 200 மகளிர் குழுக்கள் அமைக்கப் பட்டு, அதன் மூலம் 2,000 பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ. பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெண்களின் சம்பாதிக்கும் சக்தி உயர்வு பெற்றால், தானாகவே அந்தக் குடும்ப அங்கத்தினர்களின், குறிப்பாக குழந்தைகளின் உணவு, சுகா தாரம் மற்றும் கல்வி ஆகிய வற்றில் சிறந்த முன்னேற்றம் அடைய வாய்ப்புண்டு என்று அரசு கருதி, பெண்களின் வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்து வதற்காக, ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (Development of Women and Children in Rural Areas) உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கிராமத்தில் உள்ள பெண்களின் வருமானத்தைப் பெருக்கிடவும், அவர்களுக்குப் பல்வேறு வித மான தொழில்களில் பயிற்சிகள் அளிப்பதற்கு ஏதுவாக 10 பெண்கள் அடங்கிய ஒரு குழுவாக 200 மகளிர் குழுக்கள் நமது மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தது 15 மகளிர் குழுக்கள் அமைக்கப்பட உள்ளது. இதுவரை மாவட்டத் திலுள்ள 12 ஊராட்சி ஒன்றியங் களிலும் உடனடியாக 100 மகளிர் குழுக்கள் அமைப்ப தற்கான ஆயத்தப் பணிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத் திட்ட அலுவலரின் மூலமாக உதவித் திட்ட அலு வலர்கள், 'ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், முக்கிய சேவிகாக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் நட வடிக்கை எடுக்கப்பட்டு வரு கின்றது.

**ஒருவனிடம் இருக்கும் ஊக்கமே அவனுடைய நிலை யான உடைமையாகும்.**

**—திருவள்ளுவர்**

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட மானது, தமிழ்நாட்டில் இதற்கு முன்பாக ஒருசில மாவட்டங் களில் செயல்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது இத் திட்டமானது விரிவடைந்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ளது.

'டோக்ரா' திட்டத்தின் கீழ் சிதம்பரனார் மாவட்டத்தில் முதற்கட்டமாக 30 குழுக் களை அமைப்பதற்கு ரூ.7.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் மகளிர் குழு ஒவ்வொன்றிற்கும் மத்திய, மாநில அரசுகள் சரிபாதி நிதி ஒதுக்கீடு செய்கின்றன. மேலும் 'யுனிசெப்' நிறுவனம் (ஐக்கிய நாடு சர்வதேசக் குழந்தைகள் மற்றும் கல்வி நிறுவன அமைப்பு) மத்திய அரசு ஒதுக்கிடும் நிதியில் 50 சதவிகிதத்தைக் குழுக்களை அமைப்பதற்கு வழங்குகிறது. இதன்படி ஒவ்வொரு குழு விற்கும் மத்திய, மாநில அரசுகள் தலா ரூ.10,000மும், 'யுனிசெப்' நிறுவனம் ரூ.5,000மும், ஆக மொத்தம் ரூ.25,000 ஒரு குழு அமைப்பதற்குச் சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. 10 பெண்கள்

அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, தங்களது பகுதியில் கிடைக்கப்பெறும் (தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான) கச்சாப் பொருட்களை வாங்குவதற்கும், சில தொழில்களில் பயிற்சி வழங்குவதற்கும் இந்தச்சுழல் நிதி பயன்படுத்தப்படும். இவ்வாறு அமைக்கப்படும் குழுக்களில் உள்ள பெண்களின் குழந்தைகளுக்கு அரசு, சமூகநலத்துறை மூலம் வழங்கிவரும் அனைத்து நல உதவிகளையும் பெறச் செய்யவும், குழந்தைகளைப் பராமரிக்கவும் இத்திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

நமது மாவட்டத்தில் பாய் முடைதல், பிரம்புக்கூடை முடைதல், பனை ஓலைப் பொருட்கள் செய்தல், தையல், கோழிப் பண்ணைகள் அமைத்தல் போன்ற 36 வகையான தொழில்கள் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இந்த மகளிர் குழுக்கள் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள கிராமங்களில் அமைவதற்குத் தொண்டு நிறுவனங்கள் ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்நிறுவனங்களின் மூலம் அமைக்கப்படும் குழுக்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு, இக் குழுக்களில் உள்ள பெண் உறுப்பினர்களுக்கு வங்கிகள் மூலமாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான தொழில்களைச் செய்வதற்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி பெற்றுத் தரப்படும். இவ்வாறு அமைக்கப்படும் மகளிர் குழுக்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் மிக அதிக அளவில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, இவர்களின் பொருளாதார வாழ்க்கையை உயர்த்திட அரசு எண்ணியுள்ளது.

டோக்ரா திட்டத்தின் கீழ் இவ்வாறு அமைக்கப்படும் மகளிர் குழுக்கள் சிறப்பாகச் செயல்படும் பொழுது பெண்களின் பொருளாதார வாழ்க்கை முன்னேறுவதுடன், சார்பின்றி இயங்கவும், தன்னம்பிக்கையுடன் செயல்படவும் இத்திட்டம் வழி கோலுவதாக அமைகிறது. மகளிர் குழுக்கள் அமைப்பதற்குத் தேவையான அனைத்து விவரங்களையும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மூலமாகத் தெரிந்து, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் இத்திட்டத்தில் மிக அதிக அளவில் சேர்ந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**துரை. ராஜ்குமார்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
சிதம்பரனார் மாவட்டம்.

# அட்டைப்பட விளக்கம்

## முதல் அட்டை:

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 21.8.95 அன்று டெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, சென்னையில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தொடங்கி வைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் அழைப்பு விடுத்தார். முன்னதாக மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சந்தித்துப் பேசினார்.**

## நான்காம் அட்டை:

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 24.8.95 அன்று தலைமைச் செயலகத்தில் அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல்துறை அதிகாரிகளின் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.**



# விருதுநகரில் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் விழா

**வி**ருதுநகர் கே.வி.எஸ். நடுநிலைப் பள்ளி பழனிச்சாமி நாடார் கலையரங்கில், தமிழக அரசு சார்பில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த தின விழா **29.8.1995** அன்று மிகச் சிறப் பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு வந்திருந்தவர் களை, காமராசர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வி. கனகராஜ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விளக்கவுரை யாற்றினார்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது:

"யார் யார் பெருமைக்கு உரியவர்களோ, யார் யார் இந்த மண்ணின் விடுதலைக்குப் பாடு பட்டார்களோ, அவர்களை எல்லாம் பாராட்ட, புரட்சித் தலைவி அரசு என்றும் தயங்கியது இல்லை என்பதற்கு இந்த விழா ஓர் எடுத்துக்காட்டு. பெருந்தலைவர் காமராசர் இந்த நாட்டிற்காக உழைத்தவர். ஏழை பங்காளராக இருந்து, ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை உயர்த்த பாடுபட்டவர்.

"அறிவுமிக்க சமுதாயம் உருவாக வேண்டும் என்று எண்ணிக் கல்விக் கண்ணைத் திறந்துவைத்த பெருமை காமராஜருக்கு உண்டு. அவர் மறைந்த பிறகும் இந்த நாட்டு மக்கள் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அவர் சரித்திரம் படைத்தவர் என்பதால் தான்".

பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசினார். அவர் பேசியதாவது:

"யார் யார் இந்த நாட்டிற்குப்

புகழ் சேர்த்தார்களோ, யார் யார் இந்த நாட்டிற்குப் பாடுபட்டார் களோ அவர்கள் பிறந்தநாளைப் புரட்சித் தலைவர் அவர்களும், அவர் வழியில் வந்த புரட்சித் தலைவி அவர்களும் கொண் டாடிக் கொண்டு இருக் கிறார்கள். வாழ்ந்து காட்டிய பெரியவர்கள் வரலாறு, வாழ வேண்டும் என்று எண்ணுகிற இளைஞர்களுக்கு, மாணவர் களுக்கு எடுத்துக்காட்டாக அமையும்.

அதனால்தான் 32 பேர்களின் பிறந்தநாள் விழாவை அரசு கொண்டாடி வருகிறது. காமராசர் தங்கைக்கு மாதந் தோறும் ரூ.1,000 வழங்கிக் கொண்டிருந்தார் புரட்சித் தலைவி. காமராசரின் தங்கை பேரன்கள் வசதியற்று இருக் கிறோம் என்று சொன்னபோது, 4 பேருக்கு வீடும் தந்து, 7.50 இலட்சம் ரூபாயும் தந்து காப்பாற்றிய பெருமை புரட்சித் தலைவியையே சேரும்.

"நாட்டுக்கு உழைத்தவர் களுக்கு நன்றி செலுத்துகிற பண்பு, புரட்சித்தலைவிக்கு உண்டு. மொரார்ஜி தேசாயும், லால்பகதூர் சாஸ்திரியும், பிரதமர் பதவிக்குப் போட்டி யிட்டபோது சாதாரணமாக அந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்தவர் காமராசர். ஆனால் காமராசர் தனித் தனியாக எம்.பி.க்களைக் கூப் பிட்டு யாரை ஆதரிக்கிறீர்கள் என்று கேட்டு, லால்பகதூர் சாஸ்திரியைப் பிரதமர் என்று அறிவித்தார். அதேபோலத்தான் இந்திரா காந்தியையும் பிரதமர் ஆக்கினார். பெருந்தலைவர் காமராசருக்குப் பள்ளிப்




உரிமைகளை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு நம்முடைய கடமைகளை மறந்து விட்டால், அந்த உரிமைகளை நாம் என்றும் அடையமாட்டோம். கடமைகளைச் செய்து தீர்த் தோமானால் உரிமைகள் தாமே வந்து சேரும். கடமைகளைச் செய்யாமல், உரிமைகளை அடைய ஓடினோமானால் உரிமைகள், கொள்ளி வாய்ப் பிசாசைப் போல் நம் கைக்கு எட்டாமல் தூர மாகவே போய்க் கொண்டிருக்கும். நாம் ஓட ஓட அதுவும் கைக்கு எட்டாமல் முன்னால் ஓடும்.

—அண்ணல் காந்தியடிகள்

படிப்புதான் குறைவு. ஆனால், அனுபவ அறிவு அதிகம். 6வது வரைதான் படித்தாரே தவிர, ஆங்கிலப் பத்திரிகைகளை எல்லாம் படிப்பார்.

"கொள்கை வெற்றி பெற வேண்டும், ஜனநாயகம் வாழ வேண்டும் என்று எளிமையாய் வாழ்ந்தவர் அவர். காமராசர் ஆடம்பரத்தை விரும்பாதவர். பகட்டை விரும்பாதவர். எதைப் பற்றியும் கவலைப்படாதவர், பெருந்தலைவர் காமராசர்."

விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு சஞ்சய் ராமசாமி (விருதுநகர்), திரு கே. பாலகங்காதரன் (சிவகாசி), திருமதி வி.ஜி. மணிமேகலை (அருப்புக்கோட்டை), மாவட்டப் பால்வளத் தலைவர் திரு சு. சுந்தரபாண்டியன் ஆகியோர் பேசினார்கள்.

விழாவில், 131 பேர்களுக்கு ரூ.4.75 இலட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங் கினார்.

காமராசர் பிறந்தநாள் விழாப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற விருதுநகர் கே.வி.எஸ். மேல்நிலைப் பள்ளி மாணவர், எம். முரளி, 2வது பரிசு பெற்ற அதே பள்ளியின் மாணவர் ஜே. பாலமுருகன், கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சத்திரிய மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி ஏ. அமுதமொழி, 2-வது பரிசு பெற்ற சவுடாம்பிகா மேல்நிலைப் பள்ளி மாணவர் ஒய். கனகராஜ் ஆகியோர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். சிறுசேமிப்புக் குலுக்கலில் பரிசு பெற்றவர் களுக்கு, மாருதி கார் போன்ற பரிசுப் பொருட்களையும் வழங்கினார்.

விழா முடிவில், மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு மு. பிச்சையா அவர்கள் நன்றி கூறினார்.

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

- கவிஞர் கலி. பூங்குன்றன்

### தமிழ்த்தாய் வாழ்த்து

தென்றலாம் தேன்குடத்தில்
தித்திப்பை எடுத்தவளே!
மன்றலாம் மலர்த்தோப்பில்
மயக்கும் தேன் குடித்தவளே!
சென்றதோர் இடமெல்லாம்
சீர்த்தி முடித்தவளே!
வந்தாரை வாழ வைத்து
வாதை மிக உற்றவளே!
சந்தனத் தமிழாலே
தன்மான வணக்கத்தை
நிந்தன் தாவாயில்
பூசிட எண்ணினேன்!
கையகலத் துணியோடு
காரிருள் மாதொருத்தி
வந்த வேகத்தில்
வாய்நாறச் சொன்னாளே!

என்பெயர் தான்புராணம்
தமிழின் ஞானமென்றாள்.
மன்னிக்க முடியாது,
மரியாதை உனக்கில்லை;
புண்ணிய பாவமென்று
பொய்க்கதை மிகச் சொல்லி
புண்ணாக்கிப் போட்டாயே
புத்தியின் சாளரத்தை!
கண்ணாம் ஒழுக்கத்தை
கழுவேற்றிக் கொன்றாயே!
முன்னால் நில்லாதே
மூண்டிடும் பெருந்தீ -
என்று சொல்லுமுன்
எங்கோ பறந்தாளே!
இராவணன்முன் நின்ற
சீதைபோல் இன்னொருத்தி
எல்லாம் புலப்பட
என்முன் நின்றாள்;
என்பெயர் இதிகாசம்
என்று ரைத்தாள்.
அன்னைத் தமிழுக்கு - இது
காச மென்றுரைத்தேன்
ஒண்ட வந்தவளே - எம்
குடியைக் கெடுத்தவளே!
எண்ணி நால்வருண
இருளால் கவிழ்த்தவளே!
மனுநீதிக் கொள்ளியாலே
மயானம் செய்தவளே!
என் தமிழ் அன்னையின்
வயிற்றைக் கிழித்தவளே
கன்னட மலையாளம்
களிதெலுங்கு அத்தனையும்
சண்டையிட வைத்து
சந்தில் மறைந்தவளே!
சதிகாரி நடைகட்டு,
கருமாதி நடக்குமுன்!
என் உதடு அசையுமுன்
எதிரில் அவளில்லை!
அன்னைத் தமிழை
எண்ணிடும் போதெல்லா
என்னை அறியாமல்
இரத்தக் கொதிப்பு!
இந்நேரம் இடியுடன்
எண்ணத்தில் மின்வெட்டு!
குவிந்துபோன தமிழ்நிலத்தை
கொள்கையின் புவியீர்ப்பால்
அவிழ்ந்து மலரச்செய்த
அய்யா பெரியாரின்
அறிவு மூலதனமாம்
அழியாப் பெரு நிதியும்
வியத்தகு கவிதை
வேழப் பிளிற்றாலே
உலுக்கி நம்தோளை
உரிமை பேசவைக்கும்
புரட்சிக் கவிவேந்தன்
பாடிய நூற்பாவும் - அடடே
அன்னைத் தமிழில்
ஆனை மிடுக்கு!
ஆயிரம் வணக்கம்
அருமைத் தமிழ்த்தாயே!

### பெரியார் வாழ்த்து

வெல்லும் வாளெடுத்து
வைதிகத்தின் விலாஎலும்பில்
கொல்லும் இடமறிந்து
குறி பார்த்து வீசி
வெல்லும் பகுத்தறிவை
வீடெலாம் ஏற்றிவைத்த
வெண்தாடி வேந்தருக்கு
வீரத்தின் நல்வணக்கம்!



## தலைவர் வாழ்த்து

வெண்தாடிப் பெரியாரின் சிந்தனை
வெள்ளாவி
வெளுப்பிலே சுடர்விடும் வெள்ளை
முடியோனே!
புரட்சிக் கவிஞனின் புலிப்பால் உண்டு
புலியின் நகத்தைத் தூரிகை யாக்கி
பூகம்பக் கவி வழங்கும் புலவனே
பகையின் வேரை யழிக்கும் மறவனே
பாவேந்தர் பிள்ளைத் தமிழெனும் முத்து
மாலையைத் தமிழுக்குத் தந்த முதல்வனே
மதுரையில் நடந்த தமிழ் மாநாட்டிலும்
மறக்குணம் காட்டிய மானச் சுடரே!
மரியாதை எங்களுக்கு! உன் தலைமையில்
மதுகவி பாடும் பேறு பெற்றோம்!
வணக்கம் புலமைப் பித்தரே!
வாழ்க தமிழ்வாழ! வானத்து நீளமாய்!

## அவை வணக்கம்

பச்சைத் தமிழர் அத்தனைப் பேரும்
பாரோர் போற்றும் பாவலர் மணிகள்
பாரதி தாசன் பரம்பரை வந்த
பாட்டுக் குயில்கள் கவரி மான்கள்!
கூழுக்குப் பாடிக் கவிதைப் பாலைப்
பாழுக்கு ஊற்றும் கூலிக எல்ல!
அடிதொறும் எதுகை மோனை தவறா
அடியார்காள்! அடியேன் அன்பு வணக்கம்!
தமிழரின் அறியாமை அடிமை ஆயுள்
தஞ்சைக் கோபுரம் போலே நெடிது!
தமிழரின் பழம்பெருமை என் பதெல்லாம்
தடிஎடுத்து சண்டை போட்ட தல்லால்
தலைநிமிர் கவுரவம் தனியே இல்லை
கோயிலைக் கட்டிய இராச ராசன்
கோலத் தமிழை வெளியே தள்ளி
ஆரிய வடமொழி ஆணவக் காரியை
அர்ச்சனை மொழியென ஆணை செய்தவன்!
வீதியில் நிற்கும் தகுதி உள்ளவன்
வெயிலும் அவனைக் காய்கின்றதே!
தமிழன் கட்டிய கோயிலுக் குள்ளே
தமிழனும் இல்லை தமிழும் இல்லை
தமிழர் வீதிப் பள்ளி களிலும்
தாயில்லாப் பிள்ளையாய் தமிழும் ஆனதே!
வேற்று நாடாய்த் தமிழகம் ஆனதோ?
வீதி எல்லாம் வேற்றுமொழி நாற்றம்!
தஞ்சைத் தமிழரே தரணிவாழ் தமிழரே!
தன்மான வணக்கம் தணலாய் எழுக!
சமூக நீதி காத்தவீ ராங்கனை
தமிழையும் காப்பார் என்றநம் பிக்கையில்
கூடி யிருப்பது மக்கள் அல்ல
கொள்கை அறிவிப்பின் எதிர்பார்ப்பு
வெள்ளம்!
நெல்மணக்கும் தஞ்சைத் தரணி தன்னில்
நெஞ்சக் கழனியில் தேன்மழை பாயும்
தமிழ்மா நாட்டு மகிழ்ச்சியில் குளித்து
மயிலா டுதுறைக் காரன் பாடுகின்றேன்
புரட்சிக் கவிஞன் பெருமை பாடிட
பெற்ற பேற்றினை எண்ணி மகிழ்கிறேன்.

## புரட்சிக்கவிஞன்

பெரியார் கொளுத்திய தன்மான வெளிச்சம்
பேசு மொழியெலாம் பகுத்தறிவு முழக்கம்!
இனமான கொள்கையின் எழுச்சி விளைச்சல்

எழுத்தும் செயலும் இணைந்த துணிச்சல்!
தோன்றி மறைந்த புலவர் தொகையில்
சாகாப் புலவன் சாதனை வகையில்
புரட்சிக் கவிஞன் ஒருவனே
புவியில் நிகராய்ப் புலவனும் எவனே?

கூர்மை கொண்ட எழுத்து
கொஞ்சம் ஏட்டில் பழுத்து!
நேர்மை விம்மும் கழுத்து
நெளியாது எதிரிமுன் படுத்து!
போருக் கழைக்கும் பார்வை
பைந்தமிழ் மயிலுக்குப் போர்வை!
யாருக்கும் அடங்கா சினம் - பெரி
யாருக்கு மட்டும் அடங்கும் குணம்!

தேர்போல் அழகுக் கவிதை
தீட்டும் இவனோ புதுவை!
வேர்போய்ப் பழுக்கும் பலாவும் - இவன்
கவிதைக்கு நாக்குத் துழாவும்!
சீருக்கு வைத்த சொல்லும்
சீறும்; செருமுகம் வெல்லும்!
பாரதி பாட்டும் ஓடும் - பாரதி
தாசன் பாட்டு முன்னே!

புரட்சி நெருப்பில் போட்டு முடிக்க
புரட்சிப் படையாம் கவிதை தந்தவன்!
சுரண்டல் அமைப்புச் சமூகச் சுருளினை
சுயமரி யாதைத் தத்துவப் போரால்
புரட்டி முடிக்க வந்ததோர் புலவன்
புரட்சிக் கவிஞன் பாரதி தாசன்!

பிறப்பில் பேதம் பேசும் உலகை
பெரியார் பார்த்த வெறியில் நோக்கி
புராணக் கவிதை சேனைகள் நடத்தி
எழுச்சிக் காவியப் பாசறை சமைத்தவன்!
மறவாக் கவியால் மக்கள் மத்தியில்
மாப்புகழ்க் குடித்தனம் நடத்தி வருபவன்
பரவாத் திசையெலாம் பாரதி தாசன்
பாக்கலம் செலுத்திப் பாடுவோம் புகழையே!

நெருப்புக் கவிதையால் நெடுநாள் குப்பை
நெடியில் பிறந்த கடவுள் மதங்களின்
தருக்கு வேர்களைச் சுட்டுப் பொசுக்கிய
தந்தை பெரியாரின் தத்துவப் புத்திரன்!
வெறுத்து மனிதனைக் கூறு பிரிக்கும்
வேத மதத்தினை வேட்டுக் கவிதையால்
நொறுக்கித் தள்ளிய நூதனச் சூரியன்
பெரியார் ஒளியை வாங்கிய சந்திரன்!



பெண்ணை அடிமைச் சந்தையில் விற்கும்
பேத மதத்தினை மோதி மிதித்த
வெண்தாடிப் பெரியார் வீரக் கரத்தினில்
வெற்றியாய்ச் சிரிக்கும் வேகப் போர்வாள்!
தன்னலம் கொழுத்துப் பிறர்நலம் சுரண்டும்
திமிங்கல மனிதரைத் தேடி யழிக்கும்
மன்பதைப் பெரியார் மகத்துவம் உணர்ந்த
மண்ணின் மைந்தன் மாபெரும் கவிஞன்!

புரட்சிக் கவிஞன் புதுமைப் பாவலன்
புரட்டுகள் அறியாப் பச்சைப் பாலகன்!
திரண்டு மிளிர்ந்த மீசைக் காரன்
திராவிடம் மீட்கும் ஆசைக்காரன்!
வரவை நினைத்துப் பாட மாட்டான்
வயிற்றுக்குக் கவிதையை விற்க மாட்டான்!
படுத்தாலும் யானை குதிரை உயரம்
பாரினில் இவனோ கவிதைச் சிகரம்!

படிந்து போகும் கவிஞனல்ல
பாய்ந்து சீறும் படையின் பெருக்கம்!
படிந்து போன பழமை யிருட்டை
பறக்கச் செய்த பாட்டுச் சூரியன்!

இடிந்து போன இனத்தின் மானம்
எடுத்துக் கட்ட வந்த ஏந்தல்!
மடிந்து போன இலக்கிய வானை
மலர்ச்சிக் கவியால் புதுக்கிய வீணை!

பெரியார் கருத்துக் கருவில் வெடித்து
புரட்சிக் கவியாய்ப் பொங்கி வந்தவன்!
பெரியார் வாயின் அசைவுக் குறிப்பை
பெரிதாய் உணர்ந்து இலக்கியம் படைத்தவன்!
சரியாய் இலக்குக் குறியை வைத்து
சாதியைச் சாய்த்திடும் சண்ட மாருதம்
வரியாம் புலிகளின் நகத்தினைச் சீவி
வைதிகம் கிழித்திடும் நாத்திக வைரம்!
புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்
புதிய உலகின் பொன்னே ருழவன்!
கரவு அறியாக் கால மேகம்
கவிதை விளைச்சலில் கருத்துமுப் போகம்!
வரவு வறுமைப் பரிசென் றாலும்
வணங்காக் கொள்கையின் வெற்றி முரசம்!
பகுத்தறிவு மன்றத்தில் உலகமென்ற
பழயமுத லாளியினை நிற்க வைத்து
வெடிகுண்டு வினாக்களை வீசித் தள்ளி
வேரோடு பழமைதனை சாய்த்த வீரன்
மாந்தோப்புக் குளிரிலே காதல் பாட்டு
மாபழியாம் சாதிக்கோ அங்கே வேட்டு!
இருட்டறை யில் உள்ளதடா உலகம்
இருக்க லாமா சாதிக் கலகம்?
வினாவில் நெளிவது வார்த்தை யல்ல;
வெடிமருந்துப் பட்டறையின்வேட்டுச் சத்தம்!

எல்லார்க்கும் எல்லாம் என்ப தான
இலட்சியம் காட்டும் 'பாண்டியன் பரிசு'
வடக்குச் சழக்கை வட்டி முதலாய்
அடக்கி முடிக்கும் 'தமிழச்சியின் கத்தி'!
தெய்வ மொழிஎனத் தேரில் மிதக்கும்
தீங்கை முறிக்க தடந்தோள் தூக்கும்
தன்மான காவியம் 'தமிழி யக்கம்'
தமிழர்க்குக் கிடைத்த பெருமி லக்கம்!

விதவைப் பெண்ணின் இளமைக் கோரிக்கை
விண்ணப்ப மல்ல உரிமைப் பேரிகை!
அடிவ யிற்றா லன்றோ கத்தினான்
அடடே! அதுவன்றோ மனித நேயம்!
காதலுக்கு வழிவகுத்துக் கருப்பாதை சாத்தும்
கவிஞனின் வரிகள் காலத்தின் குறிகள்!
விஞ்ஞானக் கண்கள் விரலில் முளைத்தவன்
வெகுதூரப் பார்வையால் மானுடம்
கணித்தவன்!

அள்ளி யணைக்கும் 'அழகின் சிரிப்பு'
அரிமா வாக்கும் 'இளைஞர் இலக்கியம்'
நாட்டைக் கவரும் 'நல்ல தீர்ப்பு'
நால்வகை கூறும் பன்மணித் திரள்
மூட நோயை முற்றிலும் போக்கும்
மூலிகை பூக்கும் 'சஞ்சீவி பர்வதம்'
'புரட்சிக் கவிஞன்' படைப்பு களெல்லாம்
புதுமைக்கு அழைப்பு பழமைக்குச் சீட்டு!

பெரியார் கவிதை எழுத வில்லையா?
புரட்சிக் கவிஞன் எழுதிய தென்ன?
பெரியார் பேச்சின் கவிதைப் பதிப்பு
படிப்போம் நாளும் பாட வகுப்பு!
நெஞ்சில் தேக்கி நிமிர்ந்து நடப்பின்
நிமிட முடியுமுன் விடுதலை நமக்கே!
இருபதாம் நூற்றாண் டென்ன - இவன்

எண்ணமும் எழுத்தும் எந்நூற் றாண்டும்!
இனிப்பைத் தின்னும் நாக்குக்கு - பின்
இன்சுவை உண்டாலும் இனிப்பு அளிக்காது!
புரட்சிக் கவிஞனின் புதுசுவைப் பாடல்
கொம்புத் தேனைச் சுவைக்கும் நாக்கு
மற்ற கவிஞர் மதுவில் தோய்த்து
மடித்துத் தந்தாலும் சுவைப்ப தில்லை;
சர்க்கரை நோயாளி களுக்கு எச்சரிக்கை!

பாவேந்தர் பாடலை அளந்து உண்க!
இறக்கி வைத்த மூலிகைச் சாறு
இறக்கும் தமிழர் பிழைக்கு மாறு
இரத்தம் சுண்டும் சிந்தனை யோடு
இராப்பகல் வடித்த இலக்கியச் சோறு!
உண்பாய் தமிழனே உண்பாய் - இன்றேல்
வீழ்ச்சி ஆசையை உறுதி செய்வாய்!
பழம்பழம் பெருமையைப் பேசிப் பேசி

பாழ்பட்டுப் போனது நாக்குத் தண்டும்!
விழுந்த இடத்தில் மீண்டும் விழாதே
விழி எழு! வீசி நடந்து பழகு!
புரட்சிக் கவிஞன் வார்த்தை யல்ல!
புறப்படும் தடமும் அவன்! போய்ச் சேரும்
புத்துலக இடமும் அவனே!

(தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது 2.1.1995 அன்று நடைபெற்ற கவியரங்கில் பாடிய கவிதை)

# இராஜா ரவிவர்மா தீட்டிய சர்.டி. முத்துசாமி ஐயரின் ஓவியம் பாதுகாப்பு

டாக்டர் வே. ஜெயராஜ்
வேதிய பாதுகாப்புக் காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை.

இந்தியாவின் முதல் இந்திய நீதிபதியாகச் சென்னை உயர்நீதிமன்றத்தில் பணியாற்றிய சர்.டி. முத்துசாமி ஐயர், தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகில் உச்சுவாடி என்ற கிராமத்தில் 28.1.1832இல் பிறந்தார். ஏழ்மை நிலை காரணமாக அவரால் படிப்பைத் தொடரமுடியவில்லை. மாதம் ஒரு ரூபாய் சம்பளத்தில் ஒரு கர்ணத்திடம் பணியாற்றினார். அவரது திறமையை வியந்த திரு. முத்துசாமி நாயக்கர் என்ற வட்டாட்சியர் அவர் படிக்க உதவி புரிந்தார். பல்வேறு துறைகளில் பணியாற்றிய இவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்காலிகத் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார். 25.1.1895இல் உயிர்நீத்தார்.

தெருவிளக்கில் படித்து முன்னேறிய மாமேதை என்று இவரை அழைக்கிறோம். இவரது சிறந்த பணியைப் பாராட்டி இவருக்கு 'நைட்' என்ற பட்டத்தை அளித்தனர், இந்தியாவில் ஆண்ட ஆங்கிலேயர்கள். இங்கிலாந்திலேயே இவரது பளிங்கு உருவச்சிலையைச் செய்து கொண்டுவந்து அதனை, சென்னை உயர்நீதிமன்றத்தில் அமைத்தனர். இன்றும் அந்தச் சிலையைக் காணலாம்.

### சர்.டி. முத்துசாமி ஐயரும் இராஜா ரவிவர்மாவும்

1885-இல் சர்.டி. முத்துசாமி ஐயர் உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்வு பெற்றார். கேரள மாநிலத்திலுள்ள கீழ்மானூரில் 1848ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள் பிறந்த இராஜா ரவிவர்மா சிறந்த உருவ வரைவுக்கலைஞராக விளங்கி அவரது தனிப்பாணியில் ஏராளமான சிறந்த மேதைகளையும் அரசர்களையும் ஓவியங்களாக உருவாக்கிக் கொண்டிருந்தார். 38 வயது நிரம்பிய இவர், 1886-இல் சர்.டி. முத்துசாமி ஐயரின் ஓவியத்தை வரைந்துள்ளார். துணியில் செய்யப்பட்ட இந்த ஓவியம் மரச்சட்டம் பொருத்தப்பட்டுக் கிழிந்த நிலையில் சென்னையிலுள்ள சர்.டி. முத்துசாமி ஐயரின் பேரன் திரு டி.எஸ்.முத்துசாமியிடம் இருந்தது. அவர் அந்த ஓவியத்தை அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க விருப்பம் தெரிவித்ததால் அந்த ஓவியம் அருங்காட்சியக வேதிய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகத்தில் பெறப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### ஓவிய அமைப்பு

இவ்வோவியம், துணியில் எண்ணெய் வர்ணத்தால் தீட்டப்பட்டு அலங்காரச் சட்டத்தில் பொருத்தப்பட்ட 44 x 34 அளவுள்ளது. இதில் சர்.டி. முத்துசாமி ஐயர் உட்கார்ந்த நிலையில் தீட்டப்பட்டிருக்கிறது. இடுப்பில் வேட்டியும், உடலில் கோட்டும் அணிந்துள்ளார். தலையில் தலைப்பாகை, கழுத்தில் இரண்டாக மடிக்கப்பட்ட அங்கவஸ்திரம், கழுத்தில் விக்டோரியா உருவம் பொறிக்கப்பட்ட பதக்கமும், கோட்டில் ஒரு பதக்கமும் காணப்படுகின்றன. நாற்காலியில் உட்கார்ந்துள்ள அவரது வலதுகை, ஓவல் வடிவப் பளிங்கு



பாதுகாக்கப்படுமுன் ஓவியத்தின் தோற்றம்

தெரிகிறது. செப்பனிட்ட ஓவியர், தான் செப்பனிட்ட பின் வர்ணம் தீட்டியது தெரியாமலிருக்க அங்கவஸ்திரத்தை முற்றிலுமாக மாற்றி வர்ணம் தீட்டிவிட்டார், 1969-இல்; அதன்பின், கிழிந்த பகுதிகள் செய்தித்தாட்களைக் கொண்டு ஒட்டப்பட்டது என்பது, ஒட்டப்பட்ட காகிதத்தில் காணப்பட்ட தேதியிலிருந்து தெளிவாகிறது. வலதுகைப் பகுதியில் ஏற்பட்ட கிழிவை ஒட்ட ஒரு ஓவியம் வரையப்பட்ட துணிப்பகுதி வஜ்ஜிரம் கொண்டு மேசையின்மேல் தாங்கலாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஓவியம் வரைந்து ஏறத்தாழ நூறு ஆண்டுகளாகிவிட்டபடியால் ஓவியத்தில் பூசப்பட்ட வார்னிஷ் செம்பழுப்பாக மாறி ஓவிய நுணுக்கங்களை மறைத்திருந்தன. இந்த ஓவியம் ஏற்கெனவே இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது மக்கள் தங்களைப் பாதுகாக்க சென்னையை விட்டு வெளியேறியபோது விழுந்து கிழிந்துவிட்டதாகவும் அது திரு இராமையா ராஜூ என்ற ஒரு புகைப்படக்காரரால் செப்பனிடப்பட்டது என்பதும்

பாதுகாக்கப்பட்டபின் ஓவியத்தின் தோற்றம்



பின்பகுதியில் ஒட்டப்பட்டிருந்தது.

**பாதுகாப்புப் பணிகள்: தேவையற்றவை அகற்றப்படுதல்**

ஏற்கெனவே கிழிந்த பகுதியில் ஒட்டப்பட்டிருந்த துணி நார் நாராகக் கிழித்து எடுக்கப்பட்டது. வஜ்ஜிரம் பட்டு திடமாக ஒட்டி இருந்ததால் சிறிது சிறிதாகத் தேய்த்து எடுக்கப்பட்டது. செம்பழுப்பு நிறமாக நிறமாறிய வார்னிஷ் (பென்சீன்) கரைப்பான் தோய்ந்த பஞ்சினால் கவனமாகத் தேய்த்து எடுக்கப்பட்டது. அங்கவஸ்திரப் பகுதியில் செப்பனிடும்போது வரைந்த பகுதியும் பென்சீன் உதவியால் அகற்றப்பட்டது.

**ஓவியம் செப்பனிடுதல்**

ஓவியத்தில் தீட்டப்பட்டிருந்த வர்ணங்கள் சிதைந்துவிடாமலிருக்க மெல்லிய அமிலமில்லா காகிதம் கொண்டு மைதா பசையினால் காற்றுக்குமிழிகள் இல்லாமல் ஒட்டி உலர்த்தப்பட்டது. ஓவியம் தீட்டப்பட்ட துணியினை ஒத்த துணி கண்டறியப்பட்டு நீரில் பலமுறை ஊறவைத்தும் உலர்த்தியும் பாடம் செய்யப்பட்டது. சுருக்கங்கள் நீக்கிய பின் ஓவிய அளவிலும் சற்றுப் பெரிதாக வெட்டி அதன்மீது மேஸ்டிக் ரெசின் தேன் மெழுகு கலவை (1:4) உருகிய நிலையில் பூசப்பட்டது. அதுபோன்று அழுக்கு நீக்கிய பின், ஓவியத்தின் பின்பகுதியிலும் உருகிய மெழுகு ரெசின் கலவை பூசப்பட்டது. மெழுகு ரெசின் கலவை பூசப்பட்ட ஓவியத்தின் பின்புறம் புதிய துணியின் மெழுகு ரெசின் கலவை பூசப்பட்ட பகுதி சரியாக ஒன்றோடு ஒன்று ஒட்டும் விதம் வைக்கப்பட்டது. சுமார் 70-90° செ.கி. வரை சூடாக்கப்பட்ட துணி தேய்க்கும் இரும்புப் பெட்டியால் வழவழப்பான காகிதம் வைக்கப்பட்ட புதிய துணியின் மீது நடுப்பகுதியிலிருந்து ஓரமாகத் தேய்த்து உருகிய அதிகப்படியான மெழுகு ரெசின் கலவை சீராக்கப்பட்டு எஞ்சியவை அகற்றப்பட்டது. உடனே ஓவியத்தின் மீது ஓவிய அளவிற்கேற்ற ஒரு கண்ணாடி வைக்கப்பட்டு, நன்கு ஒட்டும்படி அழுத்தப்பட்டது. சில மணி நேரம் கழித்து கண்ணாடி அகற்றி வழவழப்பான காகிதம் அகற்றப்பட்டது. பழைய துணியும் புதிய துணியும் ஒட்டி ஓவியத்திற்குப் புதிய பலனளித்தது.



**முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும், அடுத்தபடியாக இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.**

இம்முறையில் ஒட்டியமையால் பழைய துணியின் கடினத் தன்மை நீங்கி மெதுவானது. மேலும், பின்னர் இதைவிடச் சிறந்த முறை கண்டுபிடிக்கப்படின் அதனைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கும் வண்ணம் மிக எளிதாக ஒட்டிய துணியைச் சூடாக்கி எடுத்துவிடலாம். முற்பகுதியில் ஒட்டப்பட்ட மெல்லிய காகிதத்தை ஈரப்படுத்தி நகத்தின் உதவியால் அகற்றப்பட்டது. முற்பகுதிக்கு ஊடுருவியிருந்த மெழுகு-ரெசின் கலவையும் பசையும் பென்சீன் கொண்டு அகற்றப்பட்டன.

**புதுப்பித்தல்**

கிழிந்த பகுதிகள் துத்தநாக ஆக்சைடு மற்றும் பருத்தி எண்ணெய்ப் பசையால் நிரப்பப்பட்டு உலர வைக்கப்பட்டன. பின்னர் தகுந்த எண்ணெய் வர்ணம் பூசப்பட்டது. வர்ணம் உலர்ந்த பின், ஓவியத்தின் மீது கண்ணாடி படாத வண்ணம் கண்ணாடி பொருத்தப்பட்டது. ஓவியத்தின் பின் தூசு, மற்றும் பூச்சிகள் செல்லாதவாறு மரத்தகடு பொருத்தப்பட்டது.


**ஓவியம் அன்பளிப்பு**

சிறந்த ஓவியரின் படைப்பாகிய இந்த ஓவியத்தை அருங்காட்சியகத்தில் பலரும் கண்டுகளிக்கும் நோக்குடனும் பல்லாண்டுகளுக்குப் பாதுகாக்கும் எண்ணத்துடனும் சர்.டி.எஸ். முத்துசாமி ஐயரின்

பேரன் திரு டி.எஸ். முத்துசாமி, சென்னை அருங்காட்சியகத்திற்கு அளித்துள்ளார். அருங்காட்சியக வாரத் தொடக்கவிழாவில் 7.3.95 அன்று, டி.எஸ். முத்துசாமி ஐயர் அவர்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் கே. பொன்னுசாமி அவர்களிடம் அளித்தார். இன்றைய நாளில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் ஓவியங்கள் அருங்காட்சியகங்களுக்கு அன்பளிப்பாக அளிக்கப்படுகின்றன.

இந்தியாவிலும் பலர் தங்களது அரும்பொருட்களை அருங்காட்சியகங்களில் பாதுகாக்க முன்வந்திருப்பது பாராட்டுவதற்குரியது. திரு. டி.எஸ். முத்துசாமி தனது அன்பளிப்பால், அவரது பெயரை அன்பளிப்பாளர் பட்டியலில் பொறித்துவிட்டதோடு அல்லாமல், சென்னை அருங்காட்சியகத்தில் இரவிவர்மாவின் படைப்பில் ஒன்றை அதிகரித்துள்ளார்.

பெயர் பெற்ற ஓவியரால் தீட்டப்பட்ட சிறந்த மேதையின் ஓவியம், திறம் படைத்த பாதுகாப்பு ஆய்வகத்தால் பாதுகாக்கப்பட்ட பின், சென்னை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்க்கப் பாதுகாப்பது நமக்குப் பெருமையன்றோ!



# உவமைக் கவிஞருக்கு இராஜராஜன் விருது

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் "மாமன்னன் இராஜராஜன்" பெயரில் வழங்கும் படைப்பிலக்கியப் பரிசு இந்த ஆண்டு உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயும், பாராட்டிதழ் ஒன்றும் அடங்கும்.

*18.8.95* அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் "மாமன்னன் இராஜராஜன்" படைப்பிலக்கியப் பரிசினைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு, வழங்கி, தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கவிஞர் சுரதா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையையும், வழங்கி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ள பாராட்டு நற்சான்றிதழ்களையும் நேரில் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு கே. பொன்னுசாமி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஒளவை நடராசன், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலாளர் திரு ஆர். கிறிஸ்துதாஸ்காந்தி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் பி. அப்துல்ரஸாக் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

# 21-ஆம் நூற்றாண்டும் கலைகளும்!

**—திரு கணபதி ஸ்தபதி**

**நா**ம் முத்தமிழைப் பற்றி அடிக்கடி பெருமையாகப் பேசி வருகிறோம். இதில் எனக்குக் கொஞ்சம் கோபமும், கவலையும் உண்டு.

ஐந்தமிழ் என்று சொல்லக் கூடாதா? என்ன தப்பாம்? இப்படி நான் பல்கலைக்கழகத் தினுடைய முன்னாள் துணை வேந்தர் திரு வி.ஐ. சுப்பிர மணியம் அவர்களையே கேட்டேன்.

ஒரு 'கீ நோட் அட்ரஸ்' கொடுப்பதற்காக என்னைக் கூப்பிட்டிருந்தார்கள். மேடை யிலே அருகருகிலே உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்போது, 'என்ன ஐயா! மூன்று தமிழையும் முத்தமிழ் என்று சொல்லு கிறோமே? கட்டடத் தமிழ் என்று ஒன்றிருக்கிறதே- அதன்பிறகு, சிற்பத் தமிழ் என்று ஒன்றிருக் கிறதே- ஐந்தமிழ் என்று சொல்லக் கூடாதா?' என்றெல் லாம் கேட்டேன்.

அவர்கள் சொன்னார்கள்-'நீ சிற்பச் செந்நூல் எழுதிவிட்டாய்; ஆகையினால், நான்காவது தமிழ் என்று சொல்லலாம்; ஐந்தாவது ஒன்றும் இல்லையே!' என்று சொன்னார்கள். நான் சொன் னேன் 'என் தமிழ், வேறு தமிழ்; காதால் கேட்கக்கூடிய தமிழ் அல்ல; கண்ணால் பார்க்கக் கூடிய தமிழ்!' என்று சொன்னேன்.

எத்தனைக் கட்டடங்களை, எத்தனைக் கோயில்களை, எத் தனைச் சிற்பங்களையெல்லாம் உண்டாக்கியிருக்கிறோம். அவை யெல்லாம் என்னவாம்? ஆக, காதால் கேட்கக்கூடிய கலைகள், கண்ணால் பார்க்கக்கூடிய கலைகள் என்று பார்க்கும் போது, இந்த முத்தமிழ் காது தான் - ஆனால், கண்ணாக- கண்கொண்டு பார்க்கக்கூடிய கலையாக இருக்கக்கூடியவை, கட்டடங்களும் சிற்பங்களும்தான். ஆகையினாலே, இந்த ஐந்து கலைகளுமே உணர்வை அடிப் படையாகக் கொண்டு வெளிப் படுவதனாலே, உணர்வை மூல மாகக் கொண்டு இருப்ப தனாலே, இவற்றையெல்லாம் ஐங்கலைகள் என்று சொல்ல வேண்டும். அப்பேர்ப்பட்ட ஒரு ஏற்றத்தைக் கொடுக்கவேண்டும்.

அது எது? இந்த 21-வது நூற்றாண்டு என்பதை நான் மிகப் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

நான் கொஞ்சம் சமஸ்கிருதம் படித்திருக்கிறேன். கொஞ்சம் சமஸ்கிருதத்திலே ஏதாவது சொன்னால், கோபித்துக் கொள்ளதீர்கள்.

சமஸ்கிருதத்தைப் பொறுத்த வரைக்கும், 'தி இண்டியன் இங்கிலீஷ்' என்று ஒன்றிருக் கிறதே பார்த்தீர்களா, அதே மாதிரி, 'ட்ராவிடியன் சான்ஸ் கிரிட்' என்று ஒன்று உண்டு. இது ரொம்பப் பேருக்குத் தெரியாது. ரொம்ப வருத்தப்படுகிறேன். ஆகையினால், 'ட்ராவிடியன் சான்ஸ்கிரிட்'லேயிருந்து சில சுலோகங்களை 'க்வோட்' செய்வேன்; மன்னித்து விடுங்கள்.

வேதம் இருக்கிறதே, அதற்கு ஒரு பெயர் தனிப் பெயர் உண்டு. சிற்பிகளாகிய நாங்கள் ஒரு வேதம் வைத்துக் கொண்டிருக் கிறோம். அதற்கும் ஒரு தனிப் பெயர் உண்டு. இவை இரண்டும் என்ன என்பதை ஒரு உபநிடத

**நல்ல குடும்பம் என்பது, வரவுக்கு மிஞ்சி செலவு செய்யாமல் இருப்பதாகும். தமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ளவேண்டும். இப்படிப் பட்ட குடும்பந்தான் கண்ணிய மான குடும்பம்.**

**—தந்தை பெரியார்**

வாக்கியத்தை உங்களிடம் சொல்லி, நான் விளங்கவைப்பேன்.

கடவுள் ஒருவர்தான் என்று சொல்கிறோம். உலகத்தில் எல்லோருமே, அதில் ஒன்று. வேறுபாடே கிடையாது. ஆனால், உபநிடதம் என்ன சொல்கிறது? கடவுள் இரண்டு, பிரமன் இரண்டு, என்று ஒரு உபநிடதம் சொல்கிறது.

எல்லோருமே என்ன செய்தோம்? என்ன இது, இரண்டு என்று சொல்கிறதே, அது தப்பாக இருக்கிறதே என்று சொல்லி, அதை ஒதுக்கி வைத்து விட்டார்கள்.

கடவுள் ஒன்று என்று சொன்னால், அது எல்லோருமே ஏற்றுக் கொள்ளக்கூடிய மிகப் பெரிய ஒரு கருத்து. ஆனால், இரண்டு என்று சொன்னால், எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்று ஒதுக்கியே வைத்துவிட்டார்கள். பல நூற்றாண்டுகளாக அந்தச் சுலோகமானது, அந்தப் பாடலானது வெளிவரவே யில்லை.

"த்வே பிரம்மனே வேதி தவ்வே". 'த்வே' என்றால் இரண்டு. 'பிரமன்' என்றால் பிரமங்கள். 'வேதிதவ்வே' என்றால் புரிந்துகொள்ள வேண்டும். Brahmam of two types - பிரம்மம் என்று சொல்லக் கூடியவை இரண்டாக இருக் கின்றன.

'த்வே பிரம்மனே வேதி தவ்வே, சப்த பிரம்ம பரஞ் செயது'.

ஒன்றுக்கு 'சப்த பிரம்மன்' என்று பெயர்; இன்னொன்றுக் குப் 'பரப் பிரம்மம்' என்று பெயர். அப்படியென்றால், சப்த மிரம்மத்திற்கு மேலே பரப் பிரம்மம் இருக்கிறது.

'சப்த பிரம்மனு விஷ்நாதஹா'- எவன் ஒருவனுக்குச் சப்த பிரம்மம் புரிகின்றதோ, அவனுக்குத்தான் பரப் பிரம்மம் 'அதிகட்சதே' பரப் பிரம்மமானது புரியும் என்று சொல்லு கிறார்கள்; கொஞ்சம் 'சிம்பிள்' ஆகச் சொல்கிறேன். சொல் எல்லாம் சப்த பிரம்மம் வகை யைச் சேர்ந்ததல்லவா? ஆக, கண்ணால் பார்க்கக்கூடிய

**அற்புதக் கயிறு:**

**'ஆணையும் பெண்ணையும், கணவனையும் மனைவியையும், ஒரு உயிரையும் மற்றொரு உயிரையும், என்றென்றும் பிரியாதபடி பிணைத்து வைக்கும் அற்புதக் கயிறே அன்பு'.. – இங்கர்சால்**

அடர்த்தி மிகுந்த Material or Physical Object என்று இருக் கிறதே, அவற்றிற்கெல்லாம் இன்னொரு பெயர் உண்டு. அதற்கு 'அர்த்தம் பிரம்மம்' என்று பெயர்.

சொல்லும் பொருளும் வேறுவகையே கிடையாது. ஆக, ஒரு பிரம்மமானது, சொல்மய மாகவும், இன்னொரு பிரம்ம மானது, பொருள்மயமாகவும் இருக்கிறது. இரண்டும் ஒன்று தான். சொல்லும் பொருளும் ஒன்று. ஆக சொல்லினுடைய பொருள் தெரியுமானால், அந்தப் பொருள் தெரிந்தவன் தான் பரப்பிரம்மத்தை அடைய முடியும், புரிந்துகொள்ள முடியும்.

இந்த இரண்டு இருக்கிறது பார்த்தீர்களா, அதிலே இயல், இசை, நாடகம் என்று சொல்லக் கூடிய அத்தனையும் சேர்ந்து சப்த பிரம்மமாகப் போய் விட்டது. ஆக, காதால் கேட்கக் கூடிய கலைகள், அதையும்விட மேலான ஒரு பொருளைப் பற்றித்தான் பாடுகின்றன; பேசு கின்றன. இந்த அர்த்த பிரம்மம் இருக்கின்றதே, பொருள் பிரம்மம், அதுதான் Architecture and Culture கட்டடமும், சிற்பமும். கட்டடம் எல்லாம் சாதாரண மான பொருள் அல்ல.

கட்டடமும் வழிபாட்டிற் குரிய ஒரு பொருளாக இருப் பதையெல்லாம் நான் ஆராய்ச்சி மூலமாகக் கண்டு, இப்போது உலகம் பூராவும் பரப்பிக் கொண்டிருக்கிறேன். ஆக, இந்தப் பிரம்மம் ஆனது, இரண்டு என்று சொல்லும் போது, சொல் வகையைச் சார்ந்தது; பொருள் வகையைச் சார்ந்தது என்று சொல்லும் போது, இந்த இரண்டும், அந்த மூன்றும் ஐந்து.

இந்த ஐந்தும் சேர்ந்து ஒன்றைத்தான் கூறுகின்றன என்ற பொருளிலே பார்க்கும் போது, உண்மையிலேயே என்னு டைய தாபம் உண்மையானது என்று நீங்கள் கருதுவீர்கள் என்று நினைக்கிறேன்.

ஆகையினால், இனிமேல்

முத்தமிழ் என்பதை விடுத்து, ஐந்தமிழ் என்று சொன்னால் ரொம்பப் பெருமைப்படுவேன் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தஞ்சாவூரில் 200 அடி உயரமான இந்த பிரகதீஸ்வரர் கோவிலைக் கட்டினானே, விமானத்தைச் செய்தானே, குஞ்சரமல்லன் இராஜராஜ பெருந்தச்சன் என்ற பெயருடைய ஒரு பெரிய சிற்பி? அந்த வழிவந்தவன் நான். என்னுடைய மூதாதையர்கள்தான் கட்டினார்கள். நான் தஞ்சையிலே பிறந்தவன்தான். இன்றைக்கும் தஞ்சாவூர் ஸ்தபதி என்று எனக்குப் பெயர்.

ஆகையினால், அந்த ஒரு பெருமையிலே உங்களுக்கு ஒன்று சொல்வேன். இப்போது நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்றால், நம்முடைய தமிழ் மரபிலே வந்த கோயில்கள், சிற்பங்கள், இவையெல்லாம் அயல் நாடுகளிலும் வருவதற்கும், பரவுவதற்கும் அரும்பாடு பட்டுக்கொண்டிருந்தேன். தனிமையாக.

இப்போது சொல்லப் போனால், தமிழ்நாட்டினுடைய மரபுச் சிற்பங்களும், மரபுக் கட்டடங்களும்தான் ரொம்ப அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்காவிலே மட்டும் 35 கோயில்கள் வந்தாகி விட்டது. நான் போகாத 'ஐலேண்டே' , 'ஓவர்சீஸ்' நாடே கிடையாது. எல்லா இடங்களிலும் அவையெல்லாம் வந்து கொண்டிருக்கின்றன.

*21-ஆம்* நூற்றாண்டிலே, அங்கே இது ஒரு பெரிய இயக்கமாக வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வளவு நன்றாகப் பரவி வருகின்றன. இந்த நிலையிலே, ஒரு சில வாக்கியங்களைச் சொல்ல வேண்டும். கலை மரபுகள் என்று சொல்லி, இசை மரபாக இருக்கட்டும், நடன மரபாக இருக்கட்டும், அல்லது சிற்ப மரபாக இருக்கட்டும்; ஒவ்வொரு நாட்டிலேயும் மக்கள் அந்தமாதிரி ஒரு மரபைத் தோற்றுவித்திருக்கிறார்கள். நான் சொல்ல ஆசைப்படுவது, ரொம்பப் பணிவுடனும், ரொம்ப அடக்கத்துடனும் நம்முடைய இசைக்கு, நம்முடைய சிற்பத்திற்கு, நம்முடைய கட்டடத்திற்கு, நம்முடைய நாட்டியத்திற்கு, நம்முடைய இலக்கியங்களுக்கு இணையாக எந்த ஒரு மரபும் இல்லை. ஒரு ஆராய்ச்சி மேடையிலே எல்லாக் கலைகளையும் வைத்துப் பார்த்து எடைபோட முடியுமானால் இந்த ஐந்து கலைகளும்தான் உச்சநிலையில் இருக்கும் என்று நான் சொல்லவில்லை; அயல் நாட்டு மக்களேபேச ஆரம்பித்து விட்டார்கள்!

**வாழ்க்கைச் சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசையால் நிரூபிக்கப் படுகின்றது. ஒன்று தொண்டு, மற்றொன்று அன்பு. தொண்டு உலகத்தைக் களிக்கச் செய்கின்றது. அன்பு மனத்தைக் களிக்கச் செய்கின்றது.**

**—காண்டேகர்**

"இதற்கு என்ன காரணம்? ஏன் உங்கள் மரபு மட்டும் இப்படி இருக்கிறதே?" என்று கேட்டார்கள். நம்முடைய கோயில் மாதிரி வேறு எங்கே யாவது கோயில் இருக்கிறதா? கோயில் ஒன்றுதான். ஆனால், இந்தமாதிரி இல்லை. இசை உண்டு. இந்த மாதிரி அந்த இசை இல்லை. ஆக, இந்தமாதிரி வேறுபட்டு, மற்ற மரபுகளிலே இருந்து அதிகமாக வேறுபட்டு, உங்களுடைய ஐந்து கலைகளும் இருக்கிறதே, அதனுடைய நுட்பம் என்ன? இரகசியம் என்ன? என்று என்னை மேலை நாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் கேட்பார்கள்.

இப்போதெல்லாம் வேலைகளை அதிகம் பண்ணாமல், பேசுவதைத்தான் அதிகம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆகையினால், பெரியோர்களையெல்லாம் காணக்கூடிய பெரிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

நான் சொன்னேன் இந்தக் கலைக்கு வாய்த்திருக்கக்கூடிய இலக்கணம் தான் இதற்குக் காரணம்.

**"யாமறிந்த மொழிகளிலே**
**தமிழ்மொழிபோல்**
**இனிதாவதெங்கும்**
**காணோம்"**

—என்று சொன்னாரே, அந்த இனிமையை உண்டாக்கியது, அந்த இலக்கணம் - அதுதான் இனிமைக்குக் காரணம். ஆக, நாம் வைத்திருக்கக்கூடிய இலக்கணம், சிற்பங்களினுடைய இனிமைக்குக் காரணம். அதே மாதிரிதான் நாட்டியத்திற்கும்,

அதேமாதிரிதான் இயலுக்கும், அதேமாதிரிதான் இசைக்கும் என்பதை நான் எடுத்துச் சொன்னேன்.

இந்த இலக்கணம் என்ன இலக்கணம்? இது எப்படித் தோன்றியது? இது யாருடைய இலக்கணம்? இதைச் சொல்லி விட்டால், இங்கேதான் ஒரு பெரிய விஞ்ஞானமானது இலக்கணங்களுக்கு, 'மியூசி காலஜி'க்கு அடியில் ஒரு விஞ்ஞானம் இருக்கிறது. என்னுடைய 'டெக்னாலஜி'க்கு அடியில் ஒரு பெரிய விஞ்ஞானம் இருக்கிறது.

அந்த விஞ்ஞானம் இருக்கிறதே, அது 'காஸ்மாலஜி' என்று சொல்லப்படும். பிரபஞ்ச விஞ்ஞானம் என்று சொல்லப்படும். பிரபஞ்சத்திலே எத்தனையோ விதமான பொருள்கள் எல்லாம் தோற்றம் கொண்டிருக்கின்றன. 'த்ரீ டைமென்ஷனிலே' கண்ணால் பார்க்கக்கூடிய அத்தனையுமே, அவற்றை 'த்ரீ டைமென்ஷனிலே' பார்ப்போமேயானால், அவை அளவுகள் கொண்டிருக்குமானால், அவற்றையெல்லாம் யார் உண்டாக்கியதாகச் சொல்கிறோம்? இறைவன் படைத்தான் என்றெல்லாம் சொல்கிறோம். இறைவனே ஒரு சிற்பியாக இருந்து படைத்திருப்பானேயானால், அதற்கு ஒரு அளவு முறை இருக்குமானால், அதற்கு ஒரு இலக்கணம் இருக்குமானால், அந்த இலக்கணத்தைக் கொண்டு, அவற்றையெல்லாம் படைத்திருப்பானேயானால், அவையெல்லாம் இனிமையாக நம் கண்களுக்கு இருக்குமானால், அப்படியென்றால் அவன் ஒரு இலக்கணத்தைக் கையாண்டிருக்கிறான்.

**ஒருவன் தன் மனத்தில் சினத்தை எண்ணாதிருப்பானானால், நினைத்த நன்மைகளைஎல்லாம் அவன் ஒருங்கே பெறுவான்.**

**—திருவள்ளுவர்**

யார்? கண்களுக்குத் தெரியாத அந்தப் பரம்பொருள். சப்த பிரம்மம், அர்த்த பிரம்மம் என்ற அந்த இலக்கணம்தான். அதன் பிறகு சிற்ப இலக்கணமாக, கட்டட இலக்கணமாக இருக்கிறது.

ஆகையினால்தான், இந்தக் கலைகள் எல்லாம் கண்ணால் பார்க்கப்படும் போதும் சரி, காதால் கேட்கப்படும்போதும் சரி; இந்த பூமியில் நாம் நிற்பதே இல்லை, இருப்பதே இல்லை. பறந்து மேல்நோக்கியே செல்வோம். ஆகையினால்தான் நுண் கலைகள் என்று பெயர் பெற்றது.

அப்பேர்ப்பட்ட ஒரு 'ஷட்டில் கிராம்மர்' ஒரு 'ஷட்டில் டெக்னாலஜி'. இவற்றைக் கொண்டு இந்த ஐங்கலைகளும் ஒரே இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து இருப்பதனாலே, இவையெல்லாம் மறைந்து வருகின்றனவே என்ற ஒரு அவமானம் எனக்கு உண்டு.

அதிலே சிற்பக் கலைக்கு இந்த இருபது இருபத்தைந் தாண்டுகாலமாகச் செயலாற்றி வரும் கலைஞர்களுடைய ஆசிகள் ரொம்ப உதவி செய்து இருக்கின்றன. இதிலே ஒரு பெரிய விஞ்ஞானம் இருக்கிறது.

இந்த விஞ்ஞானமானது, முக்கியமான ஒரு பொருளை மூலமாக வைத்து வளர்ந்திருக்கிறது. 'மாடர்ன் சைன்ஸ்' நான்கு இருக்கிறது பாருங்கள், வாயு, அக்னி, தண்ணீர்- அதற்குப் பிறகு நிலம் இவற்றைதான் ஏற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, ஆகாசம் ஒரு ஸ்பேஸ்ஐ ஏற்றுக் கொள்ளவே மாட்டேன் என்கிறது. நான் "ஏன் அப்படி?" என்று கேட்டேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? 4 'எலெமெண்ட்ஸ்' தான் சாஸ்திரம். 5 என்பது கிடையவே கிடையாது என்கிறார்கள்.

என்ன காரணம் என்றால், அந்த 'ஸ்பேஸ்' என்பதை 'டெஸ்ட் ட்யூப்' இல் அடங்க மாட்டேன் என்கிறது நிற்க மாட்டேன் என்கிறது. ஆகையினால், நம்மால் 'மெஷர்' பண்ண முடியவில்லை. ஆகையினால், நம்மால் 'மெஷர்' பண்ணமுடியாத, 'பிசிகல் அனலிசிஸ்' பண்ண முடியாத ஒன்று தேவையில்லை என்று விட்டுவிட்டோம். ஆனால் அந்த ஸ்பேஸ் ஐ நாம் என்னவாக வைத்திருக்கிறோம்? மூலமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகையினால், ஆகாசமே பிரபஞ்சமாக மாறுகிறது என்று எல்லாம் பேசுகிறோம். மதத்திலே பேசுகிறோம், எங்கெல்லாமோ பேசுகிறோம்.

அதைப்பற்றி ஒன்று சொல்

வேன். இந்த 'ஸ்பேஸ்' இருக்கிறதே, அதற்குத் தமிழ் மரபிலே அகவின் என்று பெயர். அக வெளி என்று பெயர். அதற்குத் தகராகாசம்; அதற்குப் பிறகு சிற்றாகாசம். இப்படியெல்லாம் பலவிதமான பெயர்.

அதேமாதிரி, வெளியிலே ஒன்றிருக்கிறதே அதற்கு ஆகாசம் என்றுதான் பெயர் வைத்திருக்கிறோம். அதற்குப் பேருள்ளம் என்று பெயர் இதற்குச் சிற்றுள்ளம் என்று பெயர். ஆக, ஒரு ஸ்பேஸைப் பற்றி, ஒரு அடிப்படையான 'கான்செப்ட்' நமக்கு ஏற்கெனவே இருக்கிறது.

இந்த ஸ்பேஸ் எனக்கு உள்ளே இருக்கிறதா? இல்லையா? இந்த ஸ்பேஸ் என்னுடைய உடம்புக்குள்ளே இல்லையானால், நான் என்ன ஆவேன்? 'கொலாப்ஸ்' ஆகிவிடுவேன். இந்தச் சுவருக்கு 'வேல்யு'வே கிடையாது. ஆகையினால், இப்பேர்ப்பட்ட ஒரு 'ஸ்பேஸ்' ஐ உள்ளே வைத்துக் கொண்டு பலவிதமான காரியங்களைச் செய்கிறேன். விந்தைகளைச் செய்கிறேன். பேசுகிறேன். அத்தனைக்குமே இந்த 'ஸ்பேஸ்' தான் காரணம்.

அதேமாதிரி உலகத்திலே தோன்றிய ஞாலக் கோள்கள் என்று சொல்லக்கூடிய அத்தனையுமே அந்த 'ஸ்பேஸ்' சினுடைய வெளிப்பாடுகள். ஆக, 'ஸ்பேஸ்' ஆனது, எனக்குள்ளே இருக்கிறதே, அது என்ன பண்ணுகிறது என்பதை ஆங்கிலத்திலேயே சொல்கிறேன். Space experiences; vibrates; vibrates into special forms...

இந்த உள்ளமானது, இந்த அகவிண்ணானது, உணர்கிறது. உணர்ந்தவை தொடர்புகளாக ஆக்கிக் காட்டுகின்றன. அந்தத் தொடர்புகள் வழியே, தொடர்புகள் அளவுகளாக, வடிவங்களாக மாறுகின்றன. இதுதான் அந்த 'ஸ்பேஸ்'சினுடைய ஒரு அடிப்படையான விஞ்ஞானம். Space experiences;space vibrates, space turns into forms.

ஒரு 'ஃபார்ம்' என்ன? 'ஓரல் ஃபார்ம்'. காதால் கேட்கக்கூடிய ஃபார்ம். அது முத்தமிழ். அதற்குப் பிறகு, 'விசுவல் ஃபார்ம்' என்று ஒன்று இருக்கிறது. கட்டடமும் சிற்பமும். இதில் கணக்கு ஒன்று இடையில் இருக்கிறது. பேசுவது எல்லாம் வடிவங்கள். உள்ளம் உணர்வதெல்லாம் வடிவங்கள். வடிவம் என்ன என்றால், அதற்கு அளவுகள் தேவை. உள்ளேயும் வடிவங்கள் தோன்ற வேண்டும், வெளியேயும் வடிவங்கள் தோன்ற வேண்டும். அந்த வடிவங்களுக்கு அளவாக இருக்கக்கூடியவையெல்லாம், இந்த இதயத் தொடர்பு இருக்கிறதே பார்த்தீர்களா, வைப்ரேஷன் மியூசிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸிலே, 'வைப்ரேஸன்'ஐ உண்டாக்குகிறதே, மியூசிகல் ஸ்பேஸ்'ஐ உண்டாக்கு



## இசை என்பது என்ன?

உலகத்தில் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு, நமது சொந்த மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஆங்கிலத்தை, இயல் ஆங்கிலம், இசை ஆங்கிலம், நாடக ஆங்கிலம் என்று முப்பிரிவாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. உலகின் மிகப் பழமையான மொழிகளான, கிரேக்கம், இலத்தீனம், வடமொழி, ஹீப்ரு (Hebrew) சீனம், ஆகிய மொழிகளைக் கூட, இப்படிப் பிரித்துச் சொன்னதில்லை. தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டும் தான், இந்தத் தனிச் சிறப்பு இயல்பாகவே அமைந்திருக்கின்றது.

மற்ற மொழிகளிலும் இயல் உண்டு, இசை உண்டு, நாடகமும் உண்டு. ஆனால், மொழியைக் குறிப்பிடும்போது, 'முத்தமிழ்' என்று, தமிழைக் குறிப்பிடுவது போல, வேறு எந்த மொழியையும் அழைக்கின்ற மரபு உலகில் இல்லை.

இயலாய், இசையாய், இனிய கூத்தாய், இப்படி மூன்றாய் விளங்குகின்ற முத்தமிழுக்கு, மன்றம் வைத்து, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்னும் பெயர் சூட்டி, மரபை மங்காது காத்து வருகின்றது நம் அரசு.

கவிதையும் உரைநடையும், இலக்கியத்தின் ஏனைய வடிவங்களும், இயல் என்னும் பெயரில் ஒளி வீசக் காண்கின்றோம். முற்காலம் முதல் தற்காலம் வரை, படைக்கப்பட்டிருக்கின்ற இலக்கியங்கள், காலத்தால் அழியாத மாபெரும் படைப்புகளாக விளங்குகின்றன. அந்த இயலுக்கும் ஏற்ற சிறப்பை, இன்று நாம் வழங்குகிறோம். வாய்ப்பாட்டையும், வகை வகையான இசைக் கருவிகளின் இன்னிசையையும், இசை என்கிறோம்.

எது நம்மை இசைய வைக்கின்றதோ, அது இசை. இறைவனையே இசை என்றும், இசைப்பயன் என்றும், பாடி மகிழ்ந்த பெருமக்கள் நமது முன்னோர்கள். 'ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய்' என்று, சுந்தரர் தேவாரம் சொல்லி மகிழ்கிறது.

— புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி - 2-லிருந்து

கிறதே 'மியூசிகல் பேட்டன்ட்ஸ்'ஐ உருவாக்குகிறதே, அதேமாதிரி இங்கே தொடங்கக்கூடிய இவை யெல்லாம், 'மியூசிகல் ஸ்பேஸ்' மாதிரி, 'ஸ்பேஸை' உண்டாக்கி ஸ்பெஷல் 'வால்யூம்ஸை' உண்டாக்குகிறது.

இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய அடிப்படை விஞ்ஞானமானது மரபுகளிலே, இந்த ஐந்து கலைகளுக்கும் அடிப்படையான மரபுகளிலே இருந்து வருகிறது. ஆகையினால், இதற்கு ஒரு இடமானது, அண்ணா பல்கலைக்கழகத்திலோ அல்லது சென்னைப் பல்கலைக் கழகத் திலோ ஒரு 'சேர்'ஐ உருவாக்கி, 'ட்ராடிஷனல் சைன்ஸ் அண்டு டெக்னாலஜி' என்று வைத்தால், அவற்றை மேலும் மேலும் நாம் ஆராய்ச்சி செய்யலாம். அதன் மூலமாகக் கலைகளுக்கு ஒரு பெரிய ஆக்கமும் ஒரு பெரிய அடிப்படை பிணைப்பும் ஏற் படும்.

இப்படிப்பட்ட ஒரு இன்ஸ் டிட்யூட் கர்னாடகத்திலே வர இருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய சிற்பிகள் எல்லாம், அங்கே இருக்கிற அமைச்சர் களைப் போய்க் கேட்டு, ஒரு 'இன்ஸ்டிட்யூட்' ட்ராடிஷனல் சைன்ஸ் அண்டு டெக்னாலஜி' என்ற ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறார்கள். ஒரு பல்கலைக் கழகமே வர இருக்கிறது. அதற்குப் பலவிதமான உதவிகளைச் செய்யவேண்டுமென்று என்னைக் கேட்டார்கள்.

நம்முடைய மாநிலத்திலேயே, மாமல்லபுரத்திலே ஒரு சிற்பக் கல்லூரி வைத்திருக்கிறோம். அந்தக் கல்லூரியிலே, இப்பேர்ப் பட்ட விஞ்ஞான விஷயங்களை யெல்லாம் புகுத்தி, அதனுடைய 'ஸ்டேட்டஸையும்' உயர்த்தி, அதை ஒரு பல்கலைக்கழகமாக ஆக்கிக் காட்ட முடியும். அந்த மாதிரி ஆக்கித் தரவேண்டு மென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அவர் களால் முடியும்.

உண்மையிலேயே இந்தக் காரியத்தை அவர்கள் செய்து விடுவார்களேயானால், நிச்சய மாக அவர்களுடைய பெயர் இந்தக் கலைகள் இருக்கும்வரை இருக்கும். இதை யாரும் இதுவரை செய்யவே இல்லை. அதைச் செய்வதற்கு, **21**-வது நூற்றாண்டு வரை காத்திருக்க வேண்டும் என்பதும் இல்லவே இல்லை. **21**-வது நூற்றாண்டை நாளையே தொடங்கி வைக்க லாம்!

---






தொன்றுதொட்டு, அந்தக் காலத்திலிருந்தே நாடகம், தமிழர்களின் வாழ்வில் உண்டு பண்ணியுள்ள ஊக்கம், அளவிட முடியாதது. திரைப்படக் கலை வளர்ச்சி அடைவதற்கு முன்னர், மேடை நாடகங்களை நடத்தியதில், புகழும், பெருமையும் கொண்ட பல நாடகக் குழுக்கள், தமிழ்நாட்டில் இயங்கி வந்திருக்கின்றன. தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், நவாப் ராஜமாணிக்கம், டி.கே.எஸ். சகோதரர்கள், மற்றும் நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர் போன்ற அறிஞர்கள், நாடகக் கலையின் வளர்ச்சிக்காக, அருந்தொண்டாற்றி இருக்கிறார்கள் என்பது, நம் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். சமூக நாடகங்களும், புராண நாடகங்களும், மக்களுக்குத் தேவையான கருத்துக்களை வழங்கியதோடு மட்டு மல்லாமல், இந்திய சுதந்திரத்திற்கும் எழுச்சி ஊட்டிய வரலாறு நம்மிடம் உண்டு.

நாடகக் கலையினை வெற்றிகரமாக நடத்துவதில், சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. நாடகங்கள் ஒவ்வொரு முறையும் நடத்தப்படும்போது, புதிதாக ஒரு நாடகம் அரங்கேற்றுவதைப் போன்ற நிலையை உண்டு பண்ணு வதற்கு, அசாத்தியத் திறமை வேண்டும். நாடகத்தைப் பார்க்கின்ற ரசிகர்கள், நாடக நடிகர்களின் நடிப்பின் நுணுக்கங்களை, நேரடியாக ரசித்து, தங்கள் கருத்துக்களையும் பாராட்டுகளையும் வெளிப்படுத்துகிற வாய்ப்பு, நாடகத் திற்கு மட்டுமே உண்டு. எனவே, நடிகர்கள் சரிவர நாடகக் காட்சிக்கு ஏற்றாற் போல், உணர்ச்சிகளைக் காட்டத் தவறினால், நாடகம் வெற்றி அடைய இயலாது; நடிகர்கள் பாராட்டுப் பெற முடியாது. அதிலும் குறிப்பாக நகைச்சுவை மேடை நாடகங்களில், நடிகர்கள் நகைச்சுவை ததும்ப வசனங்களை உச்சரிக்கும் முறையிலும், குரலின் ஏற்ற இறக்கத்திலும், உடலின் அசைவிலும் தான், நகைச்சுவை உணர்வினை வெளிப்படுத்த முடியும்.

**புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி - 2-லிருந்து**

## மாணவர் பக்கம்

# தெரிந்து கொள்ளுங்கள்!



## புவி ஈர்ப்பு விசை

**விஞ்ஞானி** ஐசக் நியூட்டன் ஒரு நாள் தன் தோட்டத்திற்குச் சென்றார். ஓர் ஆப்பிள் மரத்தின் அடியில் அவர் படுத்திருந்தார். ஓர் ஆப்பிள் பழம் நேராகத் தரையில் விழுந்தது. அந்த ஆப்பிள் ஏன் கீழே விழ வேண்டும்? பக்கவாட்டில் செல்லக்கூடாதா? மேலே போகக் கூடாதா? என்றெல்லாம் அவர் யோசிக்கத் தொடங்கினார். அதன் பலனாகக் கிடைத்ததே புவி ஈர்ப்பு விசை! நம் பூமிக்கு எதையும் இழுக்கக் கூடிய ஆற்றல் உண்டு! அதனால் தான், மேலே எறியப்படும் பொருளெல்லாம், பூமியால் கவரப்பட்டுக் கீழே வந்து விடுகின்றன!

புவி ஈர்ப்பின் அடிப்படையில் சில அதிசயங்கள் உள்ளன. பைசா நகரத்தில் சாய்ந்த கோபுரம் ஒன்று இருக்கிறது. ஆனால், அது விழாமலே நின்று கொண்டிருக்கிறது. அதே போன்று, பொலோன் நகரத்திலும் ஒரு சாய்ந்த கோபுரம் உள்ளது. அர்ஹாங்கெல்ஸ்க் நகரத்தில் சாய்ந்த மணிக்கூண்டு ஒன்றும் விழாமல் நிற்கின்றது! அதற்கெல்லாம் காரணம், புவி ஈர்ப்புத்தான்!

அந்தக் கோபுரங்களின் அடிப்படை அஸ்திவாரங்கள் மிக ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால், விழாமல் நிற்கும் சாய்ந்த கோபுரங்கள் அதிசயங்களாக உள்ளன.

நாம் இரண்டு கால்களில் நிற்கின்றபோது, நம் உடலின் புவி ஈர்ப்புக் குத்துக்கோடு இரண்டு பாதங்களின் பரப்பிற்குள் விழுவதால், நாம் இடையூறு இல்லாமல் நிற்க முடிகின்றது. ஆனால், ஒற்றைக்காலில் நின்றால் தள்ளாட வேண்டியது தான்! புவி ஈர்ப்புச் சரியில்லாததால் இந்த நிலை. உடலின் புவி ஈர்ப்பு மையக் குத்துக்கோடு, ஒரு பாதத்தில் விழமுடியாததால் தான் தடுமாற்றம் ஏற்படுகிறது.

'தெரியுமா உங்களுக்கு?' என்னும் நூலில், டாக்டர் சோ. சேசாசலம்

# சிட்டுக் குருவியே சிறகை விரி!



—கவிஞர் பல்லவன்

முடியும் உன்னால் முடியும் - நீ
முயன்றால் எதுவும் முடியும்!
முடியும் உன்னால் முடியும் - இமய
முடியைத் தொடவும் முடியும்!

படியும் நன்கு படியும் - வெற்றிப்
படிகள் உன்கீழ்ப் படியும்!
படியும் நெஞ்சில் படியும் - கருத்தால்
பாரைத் திருத்த முடியும்!

படரும் சாம்பல் படரும் - சோம்பல்
படர்ந்தால் நெருப்பும் குளிரும்!
வடியும் வியர்வை வடியும் - துடைத்து
வையம் பெருமை அடையும்!

இடியும் தடைகள் இடியும் - உன்
இதய பலத்தால் பொடியும்!
விடியும் நாளை விடியும் - நீ
விழித்தால் இருளும் மடியும்!

விரியும் சிறகை விரியும் - உனக்கு
விரிந்த உலகம் புரியும்!
சிரமம் இருக்கும் சிரியும் - உனக்குச்
சிகரத் தின்தலை தெரியும்!

---

வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்.

—மூதறிஞர் இராஜாஜி

மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய ஒரு கடலுக்குச் சமமானது.

—பாரதியார்

## எழுநிலை மாடம்

ஆசிரியர் : டாக்டர் நா. செயப்பிரகாசு

வெளியீடு : அருள்ஒளி பதிப்பகம்
20ஏ, 5-ஆம் தெரு
வள்ளுவர் கோட்டம்
சென்னை 600 034

பக்கம்: 112 விலை: ரூ.15

ஏழு அடுக்குகள் கொண்ட எழுநிலை மாடம் போல, ஏழு எழில்மிகு கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. கட்டுரைகள், பகுத்தும் தொகுத்தும் பாங்குற அமைக்கப்பட்டுள்ளமை நூலின் சிறப்பம்சமாகும். முதல் மாடம், இரண்டாம் மாடம் என்று ஏழு மாடங்கள் எனப் பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் தமிழின் இனிமை தோய்ந்த ஆய்வுக் கட்டுரைகள் அணி செய்கின்றன.

இன்றைய அறிவியல் உலகில் இலக்கியக் கல்வியின் இடங்குறித்து முதல் கட்டுரையில் ஆராயப்படும் கருத்துக்கள் இன்றைய சூழலுக்கு மிகவும் ஏற்றவையாக உள்ளன. "கடந்தகால உண்மைகளைக் கனிவுடனும், கலை நயத்துடனும் கருத்தில் பதிய வைத்து நிகழ்கால மாந்தரை எதிர்கால ஏற்பாடு களுக்கு ஏற்றன செய்யத் தூண்டுவது இலக்கியக் கல்வியே ஆகும்" என்று முடிவுரையில் சொல்லி, அதன் அடிப்படையில் நடைபோட அனைவரையும் அழைக்கின்றார் ஆசிரியர்.

இதேபோல, பாவேந்தர் பாரதிதாசனின் ஆய்வுரைகளும் அணிந்துரைகளும், புதுக்கவிதை களில் இறையுணர்வு ஆகிய கட்டுரைகளும்புதுமை நோக்கோடு எழுதப்பட்டுள்ளன. தமிழ்நாடு பெயர் மாற்ற வரலாறு, ஒரு பயனுள்ள கட்டுரை. இதேபோல மறைமலையடிகளாரின் சிந்தனைகள் குறித்து ஆசிரியர்




அற்புதமாக ஆராய்ந்து வெளியிட்டி ருக்கும் கருத்துக்கள் இதயத்தில் இடம் பிடிக்கின்றன. மொத்தத்தில் இந்நூலைத்தமிழாராய்ச்சி மாணவர் களும், தமிழன்பர்களும் படித்துப் பயன் பெறலாம்.

—பி.வி.கிரி

## கம்ப்யூட்டர் நிகழ்ச்சிகளை அமைப்பது எப்படி?

ஆசிரியர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

வெளியிட்டோர்:
மணிமேகலைப்
பிரசுரம்,
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.

பக்கம்: 135 விலை: 19

தமிழில் அறிவியல் வளர்ச்சி பெறவேண்டியது அவசியம் என்ற கருத்து நாடெங்கும் கற்றறி வாளர்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அந்தக் கருத்துக்கு வலிவூட்ட உதவிடும் நூலாகும் இது. கம்ப்யூட்டர் தொடர்பான பல நூல்களை வெளியிட்டிருக்கும் மணிமேகலைப் பிரசுரத்தார் இதனையும் எழிலுற வெளியிட்டி ருக்கிறார்கள்.

நிகழ்ச்சி அமைக்க வேண்டி யதில் கவனிக்க வேண்டியவை, அட்டையைத் துளையிடுதலும் சோதனை செய்தலும், நிகழ்ச்சிப் பட்டியல் அமைத்தல், கம்ப்யூட்டர் நிகழ்ச்சி மொழிகள், பைனரி எண்கள் முறை, புளோசார்ட்டிங் பேசிக் நிகழ்ச்சி அமைத்தல், போர்ட்ரான் நிகழ்ச்சி அமைப்பு, கோபால் நிகழ்ச்சி அமைப்பு, கோபால் மொழியில் உள்ள சொற்கள் வரிசை என்பன போன்ற பத்துத் தலைப்புகளின் கீழான கட்டுரைகள் வகைபட இதிலே தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிறு குறை - எழுத்துப் பிழை நீக்கு வதில் இன்னும் சற்றுக் கவனம் செலுத்தியிருக்கலாம்.

வளர்ந்துவரும் அறிவியல் தமிழுக்கு வலிமை சேர்த்திடும் நூல் இது.

—சோழராஜா

## இதழியல் நுட்பங்கள்

ஆசிரியர்: முனைவர் சி. இராசா

வெளியீடு: பார்த்திபன் பதிப்பகம்,
ஏ-12, எல்.ஐ.சி. காலனி,
திருச்சி 620 021.

பக்கம்: 162 விலை ரூ.35

அறிவியல் துணையுடன், இதழியல்துறை இன்று அதி வேகமாக வளர்ந்து வருகிறது. நாளிதழ், கிழமை இதழ், திங்களிரு முறை இதழ், திங்களிதழ், காலாண்டிதழ், ஆண்டிதழ் என்று பன் முகங்களில் அதன் பரிமாணம் வெளிப்படுவதைப் பார்க்கின் றோம்.

'ஜனநாயகம்' என்னும் மாளி கையைத் தாங்கும் தூண்களில் ஒன்றாகப் பத்திரிகைகள் விளங்கு கின்றன. இந்தத் தூண், உறுதி யாகவும் அதே சமயத்தில் உறு துணையாகவும் சமதாயத்துக்குப் பயன்பட வேண்டும். பத்திரிகை

களில் எழுதுவது, தொகுப்பது, அதை வெளியிடுவது என்ப தெல்லாம் கண்ணும் கருத்துமாகச் செய்யப்பட வேண்டிய கடமை யாகும்.

பொதுவாக, இதழ்கள் என்பது சமுதாய வயலுக்குத் தூவப்படும் தரமான உரமாகும். எனவே, இதைக் கையாளுவதில் நாம் எச்சரிக்கை யுடனும் அதே சமயத்தில் இதய சுத்தியோடும் இருக்க வேண்டும். அந்த வகையில் இதழியல் துறை ஒளி விளக்காய் விளங்கிட, இதழியலார்கள் பொறுப்புணர்ச் சியோடு பணியாற்றிட வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல் லும் சொற்சித்திரமாக விளங்கு கிறது இந்த நூல்.

நூலாசிரியர் ஏற்கெனவே இதழியல் தொடர்பான நூலொன்றை வெளியிட்டிருக்கின்றார். அதனைத் தொடர்ந்து இந்நூல் சில விளக்கங் களுடன் விரிவாக்கம் செய்யப் பட்டுள்ளது.

செய்தி என்றால் என்ன என்ப தற்கு விளக்கம் கூறி, அதனைச் சேகரிக்கும் முறையைத் தெளி வாகக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். அத்துடன், செம்மையாக்கம் (எடிட்டிங்,) தலைப்பு, தலையங்கம், படங்கள், நாளிதழின் பிற்பகுதிகள், பக்கப்புனைவு (பேஜ் மேக்கப்) என்று ஒரு பத்திரிகை உருவாக்குவதற்கான கூறுகளைப் பகுத்தும் தொகுத்தும் கூறியிருப்பது, இதழியல் துறையில் ஆசிரியருக்குள்ள முழு ஈடு பாட்டைத் தெள்ளிதின் காட்டு கிறது.

நாளிதழ் நிறுவனம், பத்திரிகை நெறிமுறை, சட்டங்கள் இதழியல் தோற்றம் ஆகியன குறித்தும் அலசி இருப்பதோடு, இதழியல் நுணுக் கங்கள், நுட்பங்கள் குறித்தும் தக்க சான்றுகளும் பல்வேறு இதழ் களிலிருந்து தரப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

பொதுவாக இதழியல் துறையில் இருப்பவர்க்கும், இத்துறை ஆர் வலருக்கும் இந்நூல் மிகச் சிறந்த கையேடாக விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

—பொன். மறைமலை

## மனித உடற் கூறுபாடு (வினா - விடைகள்)

ஆசிரியர்: டாக்டர் எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை

வெளியீடு: சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம்
E 32, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை - 600 102.

பக்கம்: 197 விலை: ரூ.100

உடற் கூறுபாடுகளைத் தமிழில் விளக்கப் படங்களோடு அற்புதமாக விளக்கும் நூல் இது.

தமிழ் மருத்துவத்தில் மனித உடற் கூறுபாடுகளை விளக்கும் நூல் இதுவாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

உடற் கூறுபாடுகளைக் கற்கும் அனைத்துமுறைகளும் மருத்துவ மாணவர்களுக்கும், மருத்துவர்களுக் கும்கூட இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கேள்வி பதில் முறையில் அமைந்திருப்பது படிக்க எளிதாக இருக்கின்றது.

—குமாரசாமி

## சுற்றுப்புறச் சூழலில் மாசுபாடுகள் (அறிவியல் கதைகள்)

ஆசிரியர்: கவியழகன், எம்.ஏ.,

வெளியீடு: கார்த்திக் பதிப்பகம்
36-A கோவிந்தன் சாலை
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

பக்கம்: 143 விலை: ரூ.16

சுற்றுப்புறச் சூழலில் மாசு பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், அவற்றால் விளையும் தீமைகளை நாளைய தலைவர்களாகிய இன்றைய மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், மூன்று கதைகளின் வாயிலாக உணர்த்த முற்பட்டுள்ள ஆசிரியரின் முயற்சி பாராட்டுதற்குரியது.

முதல் கதையில் தொழிற்சாலை களிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையில் தாவரங்கள் பாதிக்கப் படுவது குறித்தும், மரங்களை வளர்ப்பதால் நாம் பெறும் நன்மைகள், அவற்றை அழிப்பதால் விளையும் தீமைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நாம் அனைவரும் அன்றாட வாழ்வில் சந்திக்கும் மாபெரும் பிரச்சினையாகிய ஒலி மாசுபாடு குறித்து இரண்டாவது கதையில் விவரிக்கப்பட்டுள்ளது. ஒலி மாசுபாட்டால் ஏற்படும் உடல், மன ரீதியான பாதிப்புகளை அறிவியல் விஞ்ஞான வளர்ச்சியும் இயன்ற அளவு குறைக்க அறிவுறுத்தும் விதத்தைத் தெளிவுபடுத்தும் கதை இது.

வாழ்க்கையின் அத்தியா வசியமான தேவைகளுள் ஒன்றான குடிநீர், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு களால் மாசுபாடுவதைச் சித்திரிக்கும் விதத்தில் மூன்றாவது கதை அமைந்துள்ளது.

எளிய தமிழில் இனிய நடையில் அமைந்துள்ள நன்னூல் இது.

—கு. மல்லிகா

# பேசும் பொம்மைகள்

'**கைத்**தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கிலை ஒத்துக்கொள்' என்றார் நாமக்கல் கவிஞர். அவர் வாக்கு பொய்க்கவில்லை.

இன்று, கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான கைவினைஞர்கள், கைத்தொழிலைக் கற்றுக் கொண்டதன்மூலம் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

நவராத்திரி என்றதும் நமக்குப் பொம்மைக் கொலுவே நினைவுக்கு வரும். கண்ணைக் கவரும் வண்ண வண்ண பொம்மைகள், நம் எண்ணம் கவரும் வகையிலே வரிசை வரிசையாகக் காட்சியளிக்கும்.

குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் கூடப் பொம்மைகள் என்றால், கொள்ளை ஆசைதானே!

நவராத்திரிக் கொலுவை முன்னிட்டு, இன்று சென்னை மாநகரில், வழக்கம்போல் பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் நடைபெற்று வருகின்றன.

குறளகத்திலுள்ள காதி கிராப்ட், அண்ணாசாலையிலுள்ள பூம்புகார், காதி கிராமோத்யோக் பவன் ஆகியவை கண்ணையும் கருத்தையும் கவரும் வகையிலே பொம்மைக் கொலுக் கண்காட்சிகளை நடத்தி வருகின்றன.

**காதி கிராப்ட்**

நமது கலாச்சாரம், கலைத்திறன், நாகரிகம் ஆகியவற்றைப் பன்னெடுங்காலமாக உலகுக்கு எடுத்துக்காட்டி வரும் தொழில்களில் மட்பாண்டத் தொழில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். மிக அற்புதமான கற்பனை வடிவங்களைக் கைகளின் மூலம், மண் பொம்மைகளிலும், மட்பாண்டங்களின் வடிவிலும் படைத்துத் தரும் நம் தமிழ்நாட்டின் மட்பாண்டத் தொழிலாளர்களின் திறமை போற்றுதலுக்குரியதாகும்.

வேகமாக மாறிவரும் இந்த நாகரிக உலகத்தில் நமது தொன்மையான கலாச்சாரமிக்க மண்பாண்டத் தொழில் நசிந்து விடாமல் பாதுகாத்து, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான கிராமப்புற ஏழை மண்பாண்டத் தொழிலாளர்களுக்கும், காகிதக் கூழ் பொம்மைகள் செய்யும் தொழிலாளர்களுக்கும் போதிய வேலை வாய்ப்பு அளித்து, வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் வழங்கி அவர்களைப் பாதுகாக்கும் தலையாய பணியில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடந்த **35** ஆண்டுகளாகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ளது.

வாரியத்தின் **5** அலகுகள் மூலமாகவும், **119** தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், மட்பாண்டத் தொழில் திட்டங்களை வாரியம் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. **1994-95**-ஆம் ஆண்டில் மட்பாண்டத் தொழிலாளர்களின் மூலம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்தி **1,800** இலட்சமாகும்.

**14,947** மண்பாண்டக் கைவினைஞர்கள் சொந்தமாகத் தொழில் செய்ய வாரியம் நேரிடையாக நிதி உதவி அளித்துள்ளது. **1,25,864** மட்பாண்டக் கைவினைஞர்கள், வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர். இதில் **51,165** பேர் மகளிர் என்பது குறிப்பிடத்

**கிராமப்புறங்களில் வாழும் எண்ணற்ற ஏழை எளிய கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் வழிகோலுகின்றன.**

**1,25,864 மண்பாண்டக் கைவினைஞர்கள், கதர் வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர். இதில் 51,165 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.**

தக்கது. இவர்களில் பெரும் பாலோர் கிராமப்புறங்களில் வாழும் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் விருத்தாசலம், வீரப்பெருமாநல்லூர், திண்டி வனம், கடலூர், காஞ்சிபுரம், சென்னை கொசப்பேட்டை, அரும்பாக்கம் ஆகிய இடங் களிலிருந்து தயாரிக்கப்பட்ட கலைநயமிக்க பொம்மைகள் குறளகம் காதி கிராப்ட்டில் பெருமளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இது தவிர மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கதர் அங்காடிகளிலும் பொம்மைகள் ஏராளமாக விற்பனைக்கு வைக்கப்பட் டுள்ளன.

களிமண் போன்ற பல்வேறு மண்வகைகளில் வழுவழுப்பான அழகுமிகு தோற்றத்தில் பொம்மைகள், காகித கூழ் பொம்மைகள், மெருகேற்றப் பட்ட பலவண்ண மண் பொம் மைகள், செம்பு, கறுப்பு, வெள்ளை உலோகத்தில் தயாரிக்கப்பட்ட பொம்மைகள், சந்தனமரம், ரோஸ்வுட், நெட்டி, கொம்புகள் ஆகியவற்றில் தயாரிக்கப் பட்டுள்ள ஏராளமான பொம் மைகள் பல்வேறு வண்ணங் களில் காதி கிராப்டில் விற் பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கண்ணாடிக் குச்சியைக் கொண்டு உருவாக்கப்பட்ட கலை நயம் மிக்க மிகச் சிறிய பெரிய பொம்மைகள் நம்மை வெகுவாகக் கவர்கின்றன.

மேற்கு வங்காளம், கோலாப்பூர் கேரளா, ஆந்திரா முதலிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் புதிய ரக நவீனமான பொம்மைகள் காதி கிராப்டில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. குறைந்த பட்சம் ரூ.1லிருந்து ரூ.5,000 வரை விலையுள்ள பொம்மைகள் மக்களின் தேவைக்கேற்ப ஏராள மாக விற்பனைக்கு உள்ளன.

## பூம்புகார்

பூம்புகார் விற்பனை நிலையம்... தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஆண்டுதோறும் கொலு பொம் மைகள் கண்காட்சியை நடத்தி வருகின்றது.

இந்தக் கொலு பொம்மைகள் கண்காட்சியில் காகிதம், மற்றும் களிமண்ணால் செய்யப்பட்ட பொம்மைகள், கண்ணைக் கவரும் வகையில், பலவித வண்ணங்கள் தீட்டப்பட்டு, பலவித உருவங்களில் வடிவ மைக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

காகிதப் பொம்மைகளில் தசாவதாரம் செட், கல்யாண செட், ராமர் செட், காய்வகைகள் செட், பழவகைகள் செட் மற்றும் கொலு கண்காட்சிக்கு வைக்கக் கூடிய பல்வேறு வகையான பொம்மைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மண்ணினால் செய்யப்பட்ட மீனாட்சிக் கல்யாணம், முருகன் வள்ளி தெய்வானை, லக்ஷ்மி, சரஸ்வதி, விநாயகர், பாலாஜி தாயார் செட்டுகளும், கஜலக்ஷ்மி, திருச்செந்தூர் முருகன், மயில் முருகன், திருவேற்காடு கருமாரியம்மன், நடனவிநாயகர், ராதாகிருஷ்ணன், பிள்ளையார்ப் பட்டி விநாயகர், பொம்மை களும் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளன. மற்றும் பல்வேறு வகையான கலைநயம் கொண்ட கைத்திறன்மிக்க பொருட்களும் இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சிறப்புத் தள்ளுபடியாக 10 சதவிகிதம் அளிக்கப்படுகிறது.

## காதி கிராமோத்யோக் பவன்

சென்னை மாநகரத்திலேயே பொம்மைக் கொலு கண் காட்சியானது, காதி கிராமோத் யோக் பவனில் முதலில் 1969-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

சென்னை அண்ணாசாலை யில் உள்ள காதி பவனில்



பொம்மைக் கொலு கண்காட்சி ஆரம்பித்ததுபோல், அவ்வை சண்முகம் சாலையில் உள்ள காதி பவன் வளாகத்திலும் பொம்மைக் கொலுக் கண்காட்சி நடந்து வருகிறது.

இந்தப் பொம்மைக் கொலுக் கண்காட்சியில் மகாராஷ்டிரா, கோலாப்பூர், கொண்டபள்ளி, லக்னோ, கல்கத்தா, பண்ருட்டி, பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், கடலூர், மீஞ்சூர், சென்னையில் உள்ள கொசப்பேட்டை ஆகிய இடங்களில் தயார் செய்யப்படும் பொம்மைகள் இடம் பெற்றுள்ளன.



இந்த ஆண்டு புதிதாக, மியூசிக் பேபி செட், பூநூல் கல்யாண செட், நடன அரங்க செட், சிறுவர் பூங்கா செட், கணபதி மியூசிக் செட், சிவன்ராத்திரி செட் போன்ற புதிய செட்களும், தனிப்பட்ட புதிய பொம்மைகளும் இடம் பெற்றுள்ளன.

மண், காகிதக்கூழ், உலோகம், மரம், கருங்கல், பீங்கான், பளிங்குக்கல், துணி முதலியன வற்றால் தயார் செய்யப்பட்ட பொம்மைகளைப் பார்க்கிற போது பிரமிப்பே ஏற்படுகிறது.



பொதுவாக, பொம்மைக் கொலு வீட்டுக்கு அழகை மட்டுமல்ல, மனத்துக்கு மகிழ்ச்சியையும் தருகின்றது. குறிப்பாக, குழந்தைகள் மனத்திலே குதூகலத்தை மட்டுமல்ல, மன வளர்ச்சிக்கும் அவை வழிகோலுகின்றன. அதுமட்டுமல்ல, ஏழை எளியவர்களின் கைத்திறமையால் உருவான பொம்மைகள் நியாயமான விலையில் கிடைப்பதற்கும், அதன்மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் வாழ்க்கைக் கோடு மேலே உயருவதற்கும் வழிவகை ஏற்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு நாம் குறிப்பிட வேண்டும்.

**–பி.வி. கிரி**

# மதுவிலக்கில் மனப்புரட்சி

## செல்வன் கமலக்கண்ணன்

**வ**ங்கக் கடலாடி, வான்பொதியில் நடமாடி, சங்கம் மூன்றாடி, சாரலிலே விளையாடி, தங்கக் குடியாடி, தளிரும் மலராடி, விண்ணில் விளையாடி, மண்ணில் தவழ்ந்தோடி, எங்கும் ஒளிர்ந்தோங்கும் பொங்கும் பொலியமுதாம் எங்கள் தமிழே!

சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், பூவையரின் மென் நடையும், புரட்சிப் புது நடையும், என் புதுத் தமிழ் நடையில் காட்டி '21-ஆம் நூற்றாண்டை நோக்கி' எனும் இனிய தொரு கருத்து வண்டி பூட்டி தெவிட்டாது உரைக்கின்றேன் தீந்தமிழில் தீட்டி. அவைக்கு என் முதற்கண் வணக்கம், தமிழ்ச் சுவைக்கு என்றும் நான் இணக்கம், இதுவே என் தமிழ்ச் சான்றோர் உரையின் துவக்கம், இனி பொருளுரைக்கு வருவதே அவை அடக்கம்.

காவிற்கு அழகில்லை பூவின்றி, நாவிற்கு அழகில்லை நயமின்றி, பாவிற்கு அழகில்லை பொருளின்றி, அதுபோல் மனிதனுக்கு அழகில்லை அறிவியல் இன்றி. இன்று நாம் உலகில் வளர்ந்துவரும் நாடுகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். சீரழிந்துபோன ஜப்பானிய பூமி இன்று சிங்காரபுரியாக வளர்ந்திருக்கிறது. உடைந்து நொறுங்கிப் போய்விட்ட ஜெர்மானிய நாடு இன்று உல்லாசப் பயணிகளை வரவேற்கும் உற்சாகப் பூமியாகத் திகழ்கிறது. இலண்டன் மாநகரமானலும், இங்கிலாந்து தேச மானாலும் அங்கே வளமான வாழ்வு. காணப்படாத கண்டமாக இருந்து, முதலில் ஆங்கிலேயர் அங்கே குடியேறி இது தம்முடைய நாடு என்று உரிமையாக்கிக் கொண்டபின் வளர்ந்திருக்கும் அமெரிக்கத் திருநாடு. இத்தகைய முன்னேற்றங்களுக்குக் காரணம் என்னவென்றால், முக்கிய சக்தி என்னவென்றால் அதுவே அந்நாட்டு மக்களின் அறிவியல் அறிவு. இன்றே இவ்வளவு அறிவியல் வளர்ச்சியெனில் 21-ஆம் நூற்றாண்டில் உள்ள அறிவியல் வளர்ச்சியைக் கூறவா வேண்டும்? முத்திரை பதித்த சித்திரை நிலவில், இத்தரை மீது நித்திரையில் கிடக்கும் மக்கள் குடியேறி வாழும் காலம்தான் 21-ஆம் நூற்றாண்டு. வெளுக்கும் கிழக்கு நோக்கி வேள்வி செய்யமால், அஸ்தமன மேற்கை அப்போதே கீறி சூரியனைப் பறித்தெடுக்கும் ஆற்றல் பெற்ற வீர இளைஞர்கள் உருவாகும் காலந்தான் 21-ஆம் நூற்றாண்டு.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண ஏற்றதோர் பாதை அமைத்திட, தொழிலாளர் தோழர்களின் தொல்லைகளை நீக்கி, விவசாயிகள் வாழ்வில் விரைவில் முன்னேற்றம் காண, நலிவுற்று, மெலிவுற்றுக் கிடக்கும் அடித்தட்டுச் சமுதாயங்கள்

பொலிவுற்று விளங்க எழிலுற்ற திட்டங் களைத் தீட்டி மகளிர் முன்னேற்றம் காண மகத்தான பாதை அமைத்து அன்னை பாரதம் அகிலத்தில் சிறந்து விளங்கும் காலந்தான் 21-ஆம் நூற்றாண்டு.

மானுடமானது சமுதாய வீதியில், சரித்திரத் தேரோட்ட, சாதனைக் கோலமிட, சகாப்தங்கள் படைக்க, சங்கநாதம் இசைக்க, தூக்கிய வாள் முனைகளுக்கும் துப்பாக்கி முனைகளுக்கும் மத்தியில் எண்ணற்ற திருப்புமுனைகள் பல பெற்றுத் தந்த ஒரு திருப்புமுனையாக அமையும் காலந்தான் 21-ஆம் நூற்றாண்டு.

திருமணமாகிவிட்ட தம்பதிகளுக்கு இடையில் ஆண் பெண் இருவருக்கும் தங்களுடைய வாழ்க்கையில் – நடையிலும் சமபங்கு, அணியும் உடையிலும் சம பங்கு, உண்ணும் வடையிலும் சமபங்கு, அளிக்கும் கொடையிலும் சமபங்கு, தாங்கும் எடை யிலும் சமபங்கு, தூக்கும் எடையிலும் சமபங்கு, மக்கள் தொகைப் பெருக்கத் தடையிலும் சமபங்கு, நாட்டைக் காக்கும் படையிலும் சமபங்கு, வினாவும் விடையிலும் சமபங்கு, சமுதாயக் கடையிலும் சமபங்கு, இப்படி பத்திலும் சமபங்கு, ஏன் சொத்திலும் சமபங்கு என்று பெண்களுக்குச் சமபங்கு அளிக்கும் காலம்தான் 21-ஆம் நூற்றாண்டு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழன் தன் இன்தமிழ் இலக் கியச் சோலையில் இருத்திவிட்டுச் சென்ற இன்பக் கருத்து மலராம் திருக்குறளைப் புரட்டிப் பாருங்கள்

'கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

– என்றாரே தெள்ளுதமிழ்க் குறள் பகன்ற சொல்லுதமிழ் வள்ளுவனார், அத்தகைய கல்வியிலும் முன்னேற்றம் அடையும் காலம்தான் 21-ஆம் நூற்றாண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வெற்றிபெறும் வேளையிலே களத்தை விட்டோடும் வீரன், விருதுவரும் நேரத்திலே விழிதுயில் கொண்டிருக்கும் வேந்தன், பாதிநாள் போனபின் மீதிநாள் படிக்கும் மூடன், பூப்பூக்கும் முன்பாகப் புருசருக்கு விலைபோகும் பூவையரின் வாழ்வு. இவர்களைப் போல் மருத்துவத் துறையிலும் முன்னேறாத ஒரு நாட்டின் எதிர்காலமும் கேள்விக் குறியில்தான் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை, அத்தகைய மருத்துவத் துறையிலும் முன்னேற்றம் அடையும் காலந்தான் 21-ஆம் நூற்றாண்டு. இப்படி நன்மைகள் பல இருப்பின், தீமைகளும் பல இருக்கின்றன. நாம் நூற்றுக்கணக்கான சாதிமத வேறுபாடு களுக்குத் தீண்டாமை உணர்வுகளுக்கு நம்மையும் பலிகொடுத்துவிட்ட காரணத் தினால் நம்மையும் உட்படுத்திக்கொண்டு ஆட்படுத்திக்கொண்டுவிட்ட காரணத்தினால், இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றமே ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலம்

## பொன்மொழிகள்

உண்மைக்காக எதை வேண்டுமானாலும் இழக் கலாம். ஆனால், எதன் பொருட்டும் உண்மையைத் துறக்கலாகாது.

–சுவாமி விவேகானந்தர்

உண்மையே சொல், அது உன் வார்த்தையைப் பாது காக்கும். கலந்து யோசனை செய், அது உன் சிந்தனையை வளமாக்கும்.

–வள்ளலார்

ஜனநாயகத்தில் ஒவ்வொரு குடிமகனும் சிந்திக்கும் திற னுள்ளவராகவும், கல்வியறிவு உடையவராகவும் திகழ்தல் வேண்டும்.

–டாக்டர் அம்பேத்கர்

பின்நோக்கிக் கிடக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

‘இருட்டறையில் உள்ளதடா, உலகம்; சாதி
இருக்கின்றது
என்பானும் இருக்கின்றானே’

– என்ற பாவேந்தரின் பாட்டு வரிகளுக்குப் பைந்தமிழ் ஏட்டு வரிகளுக்கு, பண்பிதயக் கூட்டு வரிகளுக்கு, ஊட்டம் கொடுத்தோமா என்றால் இல்லை. கிழக்கே பிறந்தவன் கீழானவன், மேற்கே பிறந்தவன் மேலானவன், வடக்கே பிறந்தவன் வாழப் பிறந்தவன், தெற்கே பிறந்தவன் தேயப் பிறந்தவன் என்ற வர்க்கப் பிரிவினைகளும் வக்கிரச் செயல்களும் வலம் வந்துகொண்டிருப் பதைத் தடுத்தோமா என்றால் இல்லை.நேற்றைய பொழுது கண்ணீரால் கரைந்தது. இன்றைய பொழுது செந்நீரால் நிறைந்தது, நாளைய பொழுது எப்படி விடியுமோ என்ற கேள்விக் குறியில்தான் இந்த மானுடமானது சமுதாய வீதியில் நடமாடிக் கொண்டிருக்கிறது. சமுதாயக் குற்றங்களும் நடனமாடிக் கொண்டிருக்கின்றன.

தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டுப்போன பாரத தேசம் தன்னை வாழ்வித்துத் தந்த அண்ணல் காந்தியடிகளும், உலக நாடுகள் உச்சாணிக் கொம்பில் வைத்து உவகைக் கூத்தாடிய உன்னதத் தலைவி இந்திரா காந்தி அவர்களும், பார் முழுதும் போர்ப் பறையை தீக்கிரையாக்கி சமாதானப் புறாவைச் சமதர்மப் பாதையிலே பறக்கவிட்ட ராஜீவ் காந்தி அவர்களும், துப்பாக்கிகளே தேசியம், வெடிகுண்டுச் சப்தங்களே தேசிய கீதம், செங்குருதி வாடைகளே பொதுவுடைமைச் சித்தாந்தம் என்ற கோட்டான்களின் கொடூரச் சதிக்கு ஆளாகி இந்தியாவின் இதயம் துப்பாக்கிக் குண்டுகளால் தூளாகி, ரத்தச் சேற்றினை முத்தமிட்டவாறே ஜனநாயகப் புறா பாழாகி, அந்தச் சோகம் முழுவதும் ஒரு கூரிய வேலாகி பாரத மாதாவின் நெஞ்சைத் தேய்த்ததே! ஐயகோ! நெஞ்சம் பதைத்ததே. எனவே, 21-ஆம் நூற்றாண்டில் சாதிக் கரையான்களும், தீண்டாமை மத இன வெறி ஆபாசப் புற்றுகளும் வன்முறைகளும் மிகுந்து இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

‘முப்பது கோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்’ என்றுபாரதி பாடினான் அன்று. 80 கோடி முகமுடையாள் எதிர்காலத்தை எண்ணி ஏங்குகிறாள் என்று பாடத்தோன்றும் அளவுக்கு இன்று மக்கள் தொகை பெருகிவிட்டது. மேலும் மதுவின் காரணமாக மக்கள் ஒளி இழந்த வீடாக, உயிர் இழந்த உடலாக, களை மலிந்த பயிராக, கவினிழந்த மலராக அல்லலுறு கிறார்கள். அதற்காகத் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் மதுவிலக்கில் மனப்புரட்சி என்ற திட்டம் பாராட்டுக் குரியதாகும்.

நாளைய உலகங்களே, நம்பிக்கை நட்சத்திரங்களே, நாட்டின் முதுகெலும்புகளே, நல்லதொரு விடிவெள்ளிகளே, நாடி நரம்புகளே, நவபாரதத்தின் நவீன சிற்பிகளே, ரத்த நாளங்களே, இதயத் துடிப்புகளே, மாணவர்கள்தான், எனவே மாணவர்கள் ஆகிய நாம் உழைப்பு–நம்பிக்கை என்ற இரு தண்டவாளங்களின்மீது முயற்சி என்னும் இயந்திர வாகனத்தைச் செலுத்தி – சோர்வு, வறுமை என்னும் விபத்துக்களைத் தவிர்த்து 21-ஆம் நூற்றாண்டு நோக்கி இனிய பயணம் மேற்கொள்வோமாக!

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திருத்தல் நன்றோ, சொல்வீர்! தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும். இந்தக் கொள்கை இனிது விளங்க மந்தக் கொள்கை மாய்ந்து விலக எந்தக் குறையும் ஏற்படாதிருக்க சந்தத் தமிழில் ஒலிப்போம் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி நல்கி சென்று வருகிறேன். நன்றி, வணக்கம்.

**(உலகத் தமிழ் மாநாட்டுப் பேச்சுப் போட்டியில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து 4.1.95)**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556.95

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

